# •: விக்டோரியா படும் வேதனை :•


# திராவிடநாடு

மலர் 9 | 27-8-50 | இதழ் 9

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் நாடு 12 காசு


## பிணங்கள் பேசினால்?

## உணவுப் பிரச்சினை—உரிமைப் போராகிறது!

"சுத்தாழைத் தாயே, காப்பாற்று எங்களை" என்று வேண்டினர் அவர்கள்.

"ஆகா, அப்படியானால் என்னையே எடுத்துப் புசி, பசியடங்க!" என்று கூறிவிட்டது, கருங்கத்தாழை!

கடும் பசி போக்கக் கருங்கத்தாழையைப் புசித்தனர்—வயிறு வலிக்க ஆரம்பித்தது—பிறகு வயிற்றுப் போக்காக மாறிற்று! ஐயோ, அறுவர் மாண்டனர்.

செத்தனர், சோற்றுக்கின்றி, சோறுடையவளநாட்டில்! நெஞ்சைக் கலக்கிடும்சேதி—நினைப்பை மயக்கும் நிகழ்ச்சி!

ஆறு பிணங்கள், அதோ சிரிக்கின்றன, கேலிமட்டுமல்ல, வேதனை சொட்டச்சொட்ட—பயங்கரம் தொனிக்க சிரிக்கின்றன!

"ஏ வெட்கங் கெட்ட நாடே, கையாலாகாதவர்கள் கையிலே சிக்கிவிட்டாய். உன் மக்கள் நாங்கள்—உன் வயற்றிலே பிறந்து, உன் மடியிலே தவழ்ந்து, உன்னிடம் பாலுண்டு, உன்னால் பாராட்டப்பட்டு, சீராட்டப்பட்டு, தாலாட்டப்பட்டு வளர்ந்தவர்கள்—இன்று சாகிறோம். உன் குறையல்ல அது—பொறுப்பற்றவர்கள், திறமையற்றவர் களிடம் நிர்வாகம் போக அனுமதித்தாய். இதோ சாகிறோம், சோற்றுக்கின்றி! பட்டினியால் மடி கிறோம்-அழு, அழு, நன்றாக அழு!" என்று கூறவில்லை. அந்தப் பிணங்கள் பேசினால் இப்படித்தான் கூறியிருக்கும்!

திண்டுக்கல்லை யொட்டிய பகுதியில் உண்ண உணவின்றி வாடி வதங்குகின்றனர். அவர்களில் சிலர் கருங் கத்தாழையைத் தின்றனராம்—ஆறுபேர், அதனால் வயிற்றுப்போக்கு கண்டு மடிந்து விட்டனர்.

• சோகக் கதை—துன்பத் தொடர் நாவல்—பயங்கரமான பட்டினிச் சரித்திரம்! ஆளவந்தாரின் அருள் பார்வைக்கு அர்ப்பணம் இது!

உணவு நிலை இன்று மிகவும் பயங்கர நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

பட்டினிக் கதைகள் இங்கே-ஆனால், பாராளும் மந்திரிகள் பதட்டமின்றித்தான் உலவுகிறார்கள். ஆனால் பேச்சில் பிகுவைக் குறைப்பதில்லை—பித்தலாட்ட நடவடிக்கைகளில், ஆர்பாட்ட வேலைகளில் மட்டும் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள்.

டெல்லியிலே உணவு மந்திரிகளும் பிரதம மந்திரிகளும் கூடினர், உணவு நிலைமைபற்றிப் பேசினர், பிரிந்து விட்டனர்.

திரும்பிவந்த பிரதர் ராஜா கூறினார், முன்னரே தருவதாகக் கூறிய அளவிலேயே, மிகுதி இருக்கிறது. அதனையே அனுப்பவில்லையே! மேலும், அதிக உணவு எப்படிக் கேட்பது?-கொடுக்கவேண்டியதையே கொஞ்சம் விரைவில் கொடுத்தாலே போதுமே என்று! மத்திய அரசாங்கத்திடம் உதவி பெற்றுவந்து சாவு நிற்கும். குழந்தை வியாபாரம் இருக்காது என்று எண்ணினோம். வெறுங் கையை வீசி, வெட்டிப் பேச்சை சிதறுகிறார் பிரதமர்.


ஊர் வந்து சேர்ந்த உணவு மந்திரியாரைச் சுற்றி வளைத்துக்கொண்டு நிருபர்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டிருக்கிறார்கள், டெல்லி சென்று வந்ததால் திருப்தியடைந்துவிட்டீர்களா என்று கேட்டபொழுது, மிசஸ் விக்டோரியா, உணவு மந்திரியார், இன்றைய நிலைமையில் முழு திருப்தியடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. எங்களுடைய கஷ்டங்களை எடுத்துச் சொன்னால், மத்திய அரசாங்கம் தனது கஷ்டங்களைக் காட்டுகிறது—அவை எங்களுக்கும் தெரிந்தவையே!—என்று கூறினார் வேதனையோடு! விக்டோரியாவின் வேதனை, வளர்ந்து செல்லும் தொடர் கதையின் முன்னுரை. முடிவுரை எழுதிடும் நாளை நாம் எதிர்பார்க்கிறோம்.

விக்டோரியா, இன்று நாடு மிகவும் துக்ககரமான பாதையில் நடந்து செல்கிறது—மத்திய அரசாங்கமும், பிரதமர் நேருவும் 1951-க்குள் சுய தேவை பூர்த்தித் திட்டம், பூரணமாக வந்து விட வேண்டும், உணவு உற்பத்தி முறையிலிருந்து என்கிறார்கள், இது சாத்தியமாவது சந்தேகமே என்று குறிப்பிட்டார், சென்னையில் பேசும் பொழுது!

உணவுக் குறைபாடு அதிகமுள்ள பிரதேசம் சென்னை—அதன் உணவு மந்திரியார் விக்டோரியா. அவர் கூறுகிறார், அதிக உணவு உற்பத்திப் பிரதேசங்கள் இந்தச் சிக்கலான நேரத்தில் உதவி செய்யவேண்டும், ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அவை இந்த அவசர காலத்தைப் பெரிதாக எண்ணவில்லை என்று! இதற்கொரு மத்திய சர்க்கார் எதற்கு? சட்ட திட்டங்கள் ஏனோ?

4-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரம், சுய உருவில்!




சுதந்திரத் திருநாள் கொண்டாடி முடித்தவர்கள் கண்டு 'பரவசப்பட' வேண்டிய காட்சி இது!

பயங்கரக் காராக்கிருகம், அங்கே அசைக்கவும் முடியாத இரும்புருண்டையிணைப்பில் கட்டுண்டு கிடக்கிறான் ஒருவன்—ஆண்டுகள் மூன்று வெகு வேகமாக உருண்டோடி விட்டன! அவனுக்கு அது ஆனந்த சுதந்தரம் என்று அறிவிக்கப்பட்டால் அவன் நீடும் நரகமாக மாட்டானா? அந்நிய ஏகாதிபத்தியம் அகன்ற பிறகு, காங்கிரசாட்சியின் பிணைப்பிலே கிடக்கிறது இந்தியா—நாடு சிறையாகிவிட்டது. நாட்டு மக்கள் சுதந்திரத்தின் பேரால் சிறைவாசம் செய்கிறார்கள். அந்தப் பயங்கர 'பாஸ்ட்டில்' உடையும் நாள் விரைவில் ஏற்படுமா?—படம், 'பிளிட்ஸ்' பத்திரிகையில் வந்தது.

# ஆசைத்தம்பி வழக்கு அப்பீல்

## ஆறு மாதம்—ஒரு மாத மாகியது!

### அபராதம் 500 கட்டவேண்டும்!

### சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல்

"காந்தியார் சாந்தியடைய" என்ற நூலை எழுதியமைக்காக ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும் 500 ரூபாய் அபராதமும் அளிக்கப்பட்டதை யொட்டி செய்து கொள்ளப்பட்ட அப்பீலில், 17—8—50 அன்று திருச்சி செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பளித்தார்.

நூலாசிரியரான தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் தண்டனை ஆறுமாதக் கடுங்காவல் என்பதிலிருந்து ஒரு மாத வெறுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அபராதம் ரூபாய் 500 கட்டப்படவேண்டுமென்றும் தவறினால் ஒருமாதம் வெறுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

மேற்படி நூலை வெளியிட்ட தோழர் கலிய பெருமாளுக்கு 15 நாள் வெறுங்காவல் தண்டனையும் 500 ரூபாய் அபராதமும், தவறினால் 15 நாள் சிறைவாசத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பதாகவும் தீர்ப்பு கூறப்பட்டது. இவருக்கு முசிரி மாஜிஸ்டிரேட் மூன்று மாதக் கடுங்காவலும் ரூ 500 அபராதமும் தவறினால் மேற்கொண்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை யென்று தீர்ப்பு தந்திருந்தார்.

"அழியட்டுமே திராவிடம்" என்ற நூல் வெளியிட்ட தோழர் தங்கவேலுக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனையும் ரூ. 500 தவறினால் மேற்கொண்டு ஒரு மாத சிறைவாசமும் அனுபவிக்க வேண்டுமென்றும் செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பு தந்தார். தண்டனை பெற்றிருக்கும் மூன்று தோழர்கள் சார்பிலும் சென்னை உயர்நீதி மன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. (சு. கி.)

# வீணர்களல்ல நாம்—வெற்றிச் சித்திரங்கள்

## உயிர்வெல்லமல்ல; சாவுஓர்விளையாட்டு

## "எதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஒழிப்போம்!"

## திருச்செங்கோட்டில் கருணாநிதி, அரங்கண்ணல்

"சிறைச்சாலை என்ன செய்யும்? என்று கொடுமுடி கோகிலம் அன்று பாடிய பாட்டை இன்று நாம் திருப்பிக் கூறுகிறோம். களங் காணத் துடித்து நிற்கும் காளைகளாகிய நமது கர்ஜனையைக் கேட்கும் காருண்ய சர்க்காரோ நமக்கு வேடிக்கையான பதிலைத் தருகிறது. சிறைச்சாலை என்ன செய்யும்—சிரைக்கச் செய்யும் என்று நடத்திக் காண்பிக்கிறது" என்று ஆத்திரம் கலந்த வேகத்தோடு சொற்பொழிவாற்றிய தோழர் மு. கருணாநிதி குறிப்பிட்டார். மழை விடவில்லை! எனினும் கூடிநின்ற மக்கள் சிறிதுகூட அசையவில்லை. ஆர்வத்தோடு கூடிக் கிடந்தனர். ஆட்சியாளர் மீது மக்கள் மன்றத்தில் எத்தகைய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை **30—7—50** அன்று திருச்செங்கோட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குழுமி நின்ற பல்லாயிரக் கணக்கான மக்களின் ஆத்திர முழக்கமும், அதிருப்தி ஆரவாரமும் எடுத்துக் காட்டியது.

கூட்டத்திற்குத் தோழர் அ. சண்முகசுந்தரம் தலைமை வகித்து, முன்னுரையாற்றிய பின்னர். தோழர் இராம. அரங்கண்ணல் பேசுகையில், திராவிடத்தின் நிலை எத்தகைய மோசமான பாதைக்கு வந்துவிட்டது என்பதை விளக்கிப் பேசினர். அப்போது அவர், "நமது வாழ்வில் ஒரு வாரத்திற்குள் மூன்று முக்கோண மாறுதல்கள்—மகிழ்ச்சி, ஆத்திரம், சோகம் ஆகியவைகள் நம்மை இந்த வாரத்திற்குள் தொடர்ந்து சேர்ந்திருக்கின்றன" என்று குறிப்பிட்டு மேலும் பேசுகையில், "இரத்தம் சிந்தியும், எட்டு மாதக் கர்ப்பிணியின் வீரத் தியாகத்திலும், ஆயிரக்கணக்கான இளைஞர்களின் வீராவேசத்தினாலும் நாம் எழுப்பிய 'இந்தி கூடாது' என்ற முழக்கம் நமக்கு வெற்றியைத் தந்துவிட்டது இன்று வெற்றிக் களிப்பிலே மூழ்கி, அதைக் கொண்டாடுவதற்காக, எனது நண்பர்களும், பொது மக்களுமாகிய நீங்கள் இங்கு பல்லாயிரக் கணக்கில் கூடியுள்ளீர்கள். உங்கள் முன் நிற்கும் நானே, அந்தக் களிப்புக் கானல்நீராகிவிட்டது, இதோ மேலுமிரண்டு அம்புகள் நமது சமுதாயத்தின்மீது பாய்ந்திருக்கின்றன என்பதைக் கூறப் போகிறேன். கோரிக்கையில் பெற்ற வெற்றி கண்ட நாம் குதூகலிக்கக் கூட நேரமில்லை! அதற்குள் கும்மிருட்டு, கோடையிடி, கோரப் பாய்பு நமது சமுதாயத்தின் மீது விழுந்திருக்கிறது! இன்பக் களிப்பில் சிறிது அயர்ந்திருக்கும் நமது இதயங்களில் ஆத்திர எரிமலை புகையும்படி செய்திருக்கின்றனர் ஆளவந்தார் ஆசைத்தம்பி போன்றோர் மீது பாய்ந்து! 'எழுத்துரிமை காக்க எழுந்துவா!' என்று தூங்கும் சியத்திடம் சுண்டெலி விளையாடுவது போலத் தூண்டி விடுகின்றன, நம்மை, நமது காங்கிரஸ் கனவான்கள். உரிமை பேசி, இன்று அரசாசனத்தமர்ந்துவிட்ட அவர்களின் அட்டகாசத்தைக் காணும் நமக்கோ ஆத்திரம் கரை புரள்கிறது. வீப்பு பேசி விஷ விளையாட்டுக்களை நடத்தி, இன்று வீழ்ச்சியடைந்துவிட்டனர்—இந்தி விஷயத்தில். இந்தி கட்டாய பாடம் இல்லை என்று, காங்கிரஸ் ஆளவந்தார் பிரகடனப்படுத்தி நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டது கண்டு மகிழ்ந்தோம். 'மகிழ்ச்சி மணம் பரவுமுன் மார்பிலே அம்பை வீசுகின்றனர்—விவேகப்பாதையை விட்டு மீண்டும் வீம்புக்கு இரையாகின்றனர், வேதாளம் மீண்டும் முருக்கமரமேறிற்று என்று சொல்வார்களே விக்கிரமாதித்தன் கதையில், அதைப்போல.

எழுத்துரிமை மீது வீசப்படும் ஈட்டியை எதிர் நின்று தாங்கி அதன் மூலம் இந்த ஆளவந்தாரின் ஆட்சித் தர்பாருக்குப் புத்திபுகட்டவேண்டும்—அதற்கான அறப்போர் துவக்கவேண்டும், என்ற யோசனைகளிலே நாமும், நமது முன்னேற்றக் கழக மத்தியக் குழுவினரும், [illegible]பட்டிருக்கும் நேரத்திலே — நட்பையும், இந்த ஆளவந்தாரையும், எல்லோரையும் இருட்டுக் குழிக்கிழுத்துச் செல்லும் பாதாள வழி வெடித்திருக்கிறது! பார்ப்பன நண்பர்களால், வடநாட்டு ஆதிக்கத் துணையுடன், வகுக்கப்பட்ட அரசியல் திட்டத்தின் மூலம்!!" என்று வேதனையோடு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் கிடைத்த தீர்ப்பை விளக்கினர்.

எல்லா வகுப்புகளுக்கும் சமநீதி வழங்குவது தான் கம்யூனல் ஜி. ஓ. என்றும், அதை ஆதிக்கபுரியினரான அக்கிரகார வாசிகள் முயன்று நின்று ஒழித்துவிட அப்போதிருந்தே ஆபத்தம் செய்து வந்தனரென்றும், 'உயிர் போயினும் உரிமையை இழக்கச் சம்மதியோம் "உயிர் எமக்கு வெல்லமல்ல; சாவு எங்களுக்கோர் விளையாட்டு" என்றும், தமது நீண்ட சொற்பொழிவில் தோழர் அரங்கண்ணல் பேசினர்.

அடுத்தபடியாகப் பெருத்த கைதட்டலுக்கிடையே, நாட்டுப் பிரச்சினைகளை எல்லாம் தனக்கே உரியதான நகைச்சுவையும் வீராவேசமும் கலந்த பேச்சின் மூலம் விளக்கித் தோழர் மு. கருணாநிதி அரியதொரு சொற்பொழிவாற்றினர். அதுபோது ஆட்சியாளர், ஆசைத்தம்பி முதலியோரை நடத்திய வகை குறித்துக் கண்டித்தார். "துவக்கத்தான் போகிறோம்—விரைவில் அறப்போர்! தோல்வியறியாச் சூரர்களாகிய எங்களின் வேக மூச்சில் வெந்து சாம்பலாகத்தான் போகிறது எதேச்சாதிகாரம்!" என்று, முழக்கமிட்டார். இந்திக்கு இந்நாட்டில் இடமில்லையென்று திராவிடரியக்கத்தார், இரண்டாவது முறையும் தங்கள் அறப்போர் மூலம் வெற்றிக்கொடி நாட்டியது குறித்துக் குறிப்பிடும்போது, "தாய்மொழியின் மீது ஈட்டியை வீசிய ஆளவந்தார் இன்றுவது தங்கள் தவறை உணர்ந்து, தங்கள் மீது படிந்திருந்த பழிச்சொல்லை நீக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் அன்போடு ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். ரயில்வே நிலையங்களில் எல்லாம் தாய்மொழிக்குச் செய்திருக்கும் துரோகம் — நமது இதயத்தைப் பிளந்து, எண்ணங்களைக் கிளறி, இரத்தம் கொதிக்கும்படி செய்கிறது. தமிழை அடியிலே போட்டு அதற்கு மேலே ஆங்கிலத்தையும் ஆதற்கு மேலே இந்தியையும் போட்டு—நாம் எல்லாம் மானமற்றவர்கள் என்று குத்திக் காட்டுவது போலச் செய்து காட்டியிருக்கிறது சந்தானம் அய்யங்கார் இலாகா. இதைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க நாம் தூங்கு மூஞ்சிகளல்ல!" என்று கர்ஜித்த தோழர் கருணாநிதி, "ஆட்சியாளர், இந்த அக்கிரமத்தை அழிக்க

(6-ம் பக்கம் பார்க்க)

# விண்மீனிடை, மின்மினிக் கோலமா?

## தாழ்ந்த தமிழகம் தலைதூக்க வேண்டாமா?

## சேலம் கல்லூரியில் கருணாநிதி முரசொலி

28—7—50 மாலை 4 மணிக்கு சேலம் முனிசிபல் கல்லூரியில் நடந்த மாணவர் கழகக்கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி 'தற்கால உலகில் தமிழகம்' என்பதுபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் சுருக்கம்.

"தற்கால உலகில் தமிழகம் என்று தலைப்புத் தந்துவிட்டு......பேசும்போது உங்கள் கொள்கைகளைக் கலந்துவிடாதீர்கள் என்ற எச்சரிக்கையும் நீட்டப்பட்டது. பலஹீனமான ஒருமனிதனை வைத்தியரிடம் நிறுத்தி, 'இவனைப்பற்றி ஏதாவது சொல்லுங்கள். இவனுக்கு என்ன நோய்......... இதற்கு என்ன சிகிச்சை என்றுமட்டும் சொல்லாதீர்கள்" என்று எச்சரித்தால் அந்த வைத்தியரின் நிலைமை என்ன ஆகுமோ அப்படியிருக்கிறது என் நிலைமை. இப்போது! இங்கே! வைத்தியர் நிலைமையில் இல்லாவிட்டாலும், சாதாரண மனிதநிலைமையில் வைத்துப்பார்த்தால்கூட.........சாயங்கால நேரத்தில் காய்ச்சலும்......சதா இருமலுமுள்ளவனைப்பார்த்து 'உடம்பை டாக்டரிடம் காட்டப்பா' என்றுதான் சொல்லத்தோன்றும். அதுபோலத்தான் தமிழகம் நோய் வாய்ப்பட்டிருக்கிறது. நோயிலிருந்துமீள அறிவுமணக்கும்கொள்கைகளை ஏற்க வேண்டுமென்கிறோம்.

தற்கால உலகில் என்று சொல்லும்போதே முற்கால உலகு நினைவுக்கு வரத்தான்செய்கிறது. அன்றொரு நாள் ஆடையற்று — அரைநிர்வாணிகளாய் இருந்தவர்கள் இன்று அலங்கார உடை அணிகிறார்கள் என்பதுமட்டுமல்ல, நாகரிக வளர்ச்சி—அன்றிருந்த நம்பிக்கைகள் — மூடக் கொள்கைகள்—புதைக்கப்பட்டு அந்தஇடத்திலே புதுமைச்சோலையைத் தோற்றுவிப்பதே நாகரிகத்தின் சிகரம்.

தற்காலம் என்றாலே பலருக்குத் தலையை வலிக்கிறது. தற்காலத்தையும், முற்காலத்தையும் மோதவிடுகிறவர்களும் பலர் இருக்கிறார்கள். இவர்கள் முன்னவர்களைக்காட்டிலும் ஆபத்தானவர்கள், ரிஸ்ட்வாட்ச் கட்டிக்கொண்டு ராகுகாலம் பார்ப்பவர்கள்—நாழிகைக் கணக்கெடுத்து நல்ல நேரம் பார்ப்பவர்களைவிட மோசமானவர்களே.

தற்கால உலகு என்னும்போது உலகில் தலைசிறந்த நாடுகள் கவனத்துக்குவருகின்றன. செல்வபுரி அமெரிக்காவிடம் ஒப்பிடும்போது தமிழகம் தரித்திரச்சேரியாக இருக்கிறது. பாட்டாளிநாடு ரஷ்யாவைக் காணும்போது—தமிழகம் முதலாளிகளின் வேட்டைக்காடாக இருக்கிறது. வைரக்கற்களிடையே கூழாங்கல்போல—விண்மீன்களிடையே மின்மினிபோல—உலகநாடுகளிடையே தமிழகம் ஒளியிழந்து கிடக்கிறது சின்னஞ்சிறு நாடுகளிலே தனி அரசு! சுதந்திரம்! விடுதலை முரசம்! தமிழகம் நான்கு மொழிகளின் தாயகம்—நாதியற்ற நிலையிலே நலிகிறது. முத்துக் குதுங்கும் கடல்களையும்—தங்கம் கொழிக்கும் கனிகளையும்—வற்றாத நதிகளையும்—வளமிக்க சோலைகளையும் — தன்னகத்தே பெற்ற தமிழகத்திலிருந்து ஓடியவர்களின் கூக்குரல் மலேயா, சிலோன் முதலியஇடங்களிலிருந்து கிளம்புவது நம்காதில் விழாமலில்லை. அதேநேரத்தில் நம் கண்கள் வைரமுடியணிந்த திருப்பதி வெங்கடேசனையும் — தங்கவீட்டில் வாழும் தில்லைநடராஜனையும் ஒருமுறைநோக்காமலில்லை.

வறுமை—பசி—பஞ்சம்......உணவில்மட்டுமல்ல......அறிவுப் பஞ்சங்கூடத்தான்!

மழை தேவையென்றால், ரஷ்யா, மேகத்தை இழுத்துவந்து மழைபொழிய வைக்கிறது. புராணத்திலே படித்தோம்—இராவணன் சிம்மாசனத்திலேவருணபகவான்படிக்கட்டாயிருந்தானென்று! இதோ இராவணன் இடத்திலே ஸ்டாலின் அமர்ந்து வருணனை ஆணையிடுகிறார். இங்கோ நாம் 'வருணஜெபம்' செய்கிறோம். வருணஜெபத்தில் பயனில்லை என்பதை அரசியலாரும்உணர்ந்துவிட்டனர். அதனால்தான் மழைபெய்ய வேண்டுமென்று "வனமகோற்சவம்" நடத்துகிறார்கள், வருணஜெபத்தைக் கைவிட்டு.

குருட்டு நம்பிக்கைகள் ஒழியவேண்டும். அப்போதுதான் தற்கால உலகில் தமிழகம் தலைநிமிர முடியும். இல்லையேல் மற்ற நாடுகள் பொற்கால உலகின் பூரணச்சந்திரன்களாகஇருக்கும்போது—தமிழகம் தற்கால உலகின் கடைக்கோடியில்கிடக்கும். தமிழகம் வளமும்—அறிவும்பெற வருங்கால உலக சிற்பிகளாம் மாணவர்கள் முன்வந்து பணியாற்றவேண்டும்."

✻

# பசுத்தோல் போர்த்திய புலிகள்!

## பத்திரிகை ஆதிபத்யத்தின் தர்பார்!

### காலம் மாறுகிறது, கவனமிருக்கட்டும்

ஏய்த்துப் பிழைப்பவன் இதோபதேசம் செய்வதும், கன்னக்கோலைக் கையிலேந்தித்திரிபவன் 'கள்ளத் தனம் கூடாது' என்று பேசுவதும், காசுக்கு ஆசைப்பட்டு கற்பை விற்பவள் கண்ணகியின் பரம்பரை என்று கூறிக்கொள்வதும்—கேலிக்குரிய நிகழ்ச்சிகள் மட்டுமல்ல — ஆபத்தானதுங் கூட!

ஜீவகாருண்யம் கொண்ட புலி, மீனிடம் வணங்கி நிற்கும் கொக்கு, நண்டுக்கு நமஸ்காரம் செய்யும் நரி—இவை நம்ப முடியாதவை, நடக்க முடியாதவை.

எனினும் இப்போது பலர் இந்த உருவிலே நடமாட எழும்பியுள்ளனர். மக்களுக்கு எது பிடிக்குமோ அதைக் கூறிக்கொண்டு, தங்கள் செல்வாக்கையும் பணப்பையையும் அதிகரிக்கும் நோக்கத்தோடு. இவர்களின் நடவடிக்கைகள் அத்தனையும் நாம் மேலே கூறிய உதாரணங்களையும் மிஞ்சும்.

சமுதாயத்தின் பாதுகாவலர் போல நடிப்பர்—பக்கத்திலேயே பணப்பையில் சேரும் பணத்தைக் குறிக்கும் கணக்கர் இருப்பார்!

பொதுஜனப் பாதுகாவலர்போல வேஷமணிவர்—இந்த சீசனில் எவ்வளவு இலாபம் வரும் இந்த வேடத்தால் என்ற சுயநலம் இதயத்தில் ஒடுங்கிக் கிடக்கும்!

'சீசன் சரக்கு' எதுவோ, அதைச் சொல்லித் தங்கள் மீது மக்களின் அனுதாபத்தைப் பெறும் இத்தகையத் திருக்கூட்டத்தின் திருவிளையாடல்கள், எவரையும் மயக்கிவிடும். 'ஆகா! இவரைப் போல உண்டோ, இந்நாட்டின் அறிவுக் களஞ்சியம்' என்று ஏமாறுவோர் பேசுவர். தங்கள் வேஷத்தைக் கண்டால் ஏமாற பலர் இருக்கின்றனர் என்கிற தைரியம்தான், இதுபோன்றவர்களின் திருவிளையாடல்கள் வளர ஆக்கம் அளிப்பதாகும். இத்தகையவர்கள் பேச்சில் கனிவு சொட்டும்—அன்பு வழியும்! ஆனால் இதயமோ இரும்பாக இருக்கும்! "பொது ஜனங்களின் பூசாரி" போலத் தம்பட்டம் அடிப்பர்—தாங்கள்தான் பொது மக்களின் தாசர்கள் போலத் தெந்தினம் பாடுவர்! "பொது மக்கள் இல்லையெனில் யாரே வாழ இயலும்? அவர்களை மறக்கலாமோ?" என்று, குழைவோடு பேசுவர்!

இந்த ஆசாமிகளின், நினைவு அண்மையில் நடைபெற்ற நெல்லை மாவட்டப் பத்திரிகையாளர் மாநாட்டில் தலைமை வகித்தவரின் பிரசங்கத்தைப் படித்ததும் ஓடிவருகிறது. அவர், அங்கு பேசுகையில், பொது மக்களுக்கும் பத்திரிகையாளர்களுக்குமுள்ள தொடர்பு குறித்து விளக்கியிருக்கிறார். "பத்திரிகையாளர்கள் மக்கள் ஆதரவைப் பெறவேண்டும். மக்கள் தான் நமது எஜமானர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது" என்பதாக, வலியுறுத்தியிருக்கிறார், பத்திரிகை நிருபர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறை, செய்திகளைப் பாரபட்சம் காட்டாமல் அனுப்பவேண்டிய அவசியம் ஆகியவைகளை எடுத்துக்கூறி. கூடியோர்—பத்திரிகையாளர்கள்! அதாவது, பத்திரிகை விஷயத்தில் தொடர்புகொண்ட நிருபர்கள், செய்தி சேகரிப்பாளர்கள். அவர்களின் பொறுப்புப் பற்றிப் பேசியவரும் சாதாரணமானவரல்ல! மிகப் பெரிய ஆங்கில தினசரியாக வளர்ந்து நிற்கும் "இந்து" இதழின் துணையாசிரியர்!

"பொது மக்கள் நமது எஜமானர்கள்" என்று, வெளியிட்டிருக்கிறார், தோழர் ரகுநாதய்யர், ஏதோ புது உண்மையைச் சொல்வது போல. "இந்து" துணையாசிரியரான அவருடைய போதனையைக்கேட்கும் நமக்கு, 'ருத்ராக்ஷப்பூனை' என்று சொல்வார்களே, அதன் கதைதான் நினைவுக்கு வருகிறது!

பொது மக்கள்—நிரம்பியது தான் நாடு. நாட்டு வாழ்வையும், நல்லது கெட்டதையும் சிருஷ்டிப்பவர்கள் அவர்கள்தான். அவர்களைத் தான் எஜமானர்களாகக்கொள்ளவேண்டும் என்று ஆசிரிய நண்பர், அறிவுரை தந்திருக்கிறார். அறிவுரை, ஏற்கத் தக்கதுமட்டுமல்ல போற்றுதற்குரியதுங்கூட. ஆனால் இந்த அறிவுரையை அலங்காரமாகத் தந்திருக்கும் அவர் இருக்கும் "இந்து" வையும் அதன் சகாக்களையும் நினைக்கும்போது, ஆத்திரமல்ல நமக்கு உண்டாவது. "எத்தகைய ஆபத்து ஆசாமிகள் மத்தியில் நாடு இருக்கிறது' என்ற திகில்தான்.

ஏனெனில், பொதுமக்களைப் போற்றியும் புகழ்ந்தும் பேசிவிட்டார்! இதோபதேசமும் புரிந்துவிட்டார்—எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று! ஆனால், இவரும் இவரது சகப்பத்திரிகைகளும் எப்படி நடந்துகொள்ளுகின்றன? பொதுமக்களை எஜமானர்களாகவா கருதுகின்றன—இல்லையே! பொசுக்கினால் சுருண்டுவிடும் சுண்டெலிகளாகவல்லவா கருதித் தங்கள் சுயநலக் கூத்தை நடத்துகின்றன.

நண்பர், பத்திரிகையாளர் பொறுப்புகுறித்து வெளியிட்டது சிந்தனைக்குரிய செய்திதான். ஆனால்செயலாற்றும் பொறுப்பிலிருக்கும்ரகுநாதர்கள் எப்படி நடந்துகொள்ளுகின்றனர்? மக்கள் மன்றத்திலே நடைபெறும் உண்மைத் தகவல்களை வெளியிடுவதுண்டா, உள்ளதை உள்ளபடியே உரைப்பதுண்டா, வெறுப்பு விருப்பு காட்டாது நடந்துகொள்வதுண்டா?

கிடைக்கும் பதில் சோகமாகத்தானிருக்கும்—ஆனால் எவ்வளவு சூதுக் கோட்டம் அமைத்து வருகிறார்கள் இவர்கள் என்பதை தெளிய வைக்கும்.

பத்திரிகைகள் மக்களின் தூதவர்கள்! ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, இங்கோ, அவைகள் சுயநல மாளிகைகள் ஆகிவிட்டன! இஷ்டமானதைப் பிரசுரிப்பதும், இஷ்டமில்லாததற்கு இருட்டடிப்புச் செய்துவிடுவதுமே இவைகளின் தேச சேவையாக இருந்துவருகின்றன. தமிழ் நாட்டில் உலவும் பத்திரிகைகள் பல உள்ளன. ஆனால் இவைகளில் ஒன்றிரண்டுகூட உண்மைக்கு மதிப்புத் தருபவையாக இல்லை!

மாற்றுக் கட்சியினர் செய்திகளை வெளியிடுவதும், அக்கட்சித் தலைவர்களின் பெயரைப் போட்டாலே எங்கு வெளிக்கு அவர்கள் தொண்டு தெரிந்துவிடுமோ என்ற பயத்தையும், அதனால் அவைகளை மதிக்காது புறக்கணிக்கும் இழிந்த செயலையுமல்ல நாம் காட்ட விரும்புவது.

நாட்டு மக்களிடையே ஏற்படும் பொதுவானக் குமுறலைக் கூட, இவைகள் திரை போட்டு மறைத்துவிடுகின்றன. அந்த அளவுக்குத் தென்னாட்டில் பத்திரிகை ஆதிபத்யம் வளர்ந்திருக்கிறது. பெரிய பத்திரிகைகளாக இருப்பவை யாவும் வகுப்புவாதிகளான "ஒரு சாரார்" ஆதிக்கத்திலேயே இருப்பதால், தங்களையும் தங்களவர் வாழ்க்கையையும் காப்பாற்றிக்கொள்ளும் கேடயங்களாகத் தங்கள் பத்திரிகைகளைக் கருதுகின்றனர்—நீதிக்குப் போரிடும் வாளாக இருக்கவேண்டும் என்பதை மறந்து தங்கள் சுயநல வாழ்வைப் பாதுகாக்கும் பிரச்சாரப் பீரங்கிகளாக அமைத்துக் கொண்டுள்ளனர்!

இந்த உண்மையை நாம் இன்று நேற்றல்ல, பல்லாண்டுகளாகவே வலியுறுத்தி வருகிறோம் என்றாலும், இப்போதுதான் எல்லோரும் உணரும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. பொதுமக்களும், இவைகளின் போக்கைப் புரிந்துகொண்டு வருகிறார்கள்.

தங்கள் ஆதிக்க நலனைப் பாதுகாக்கும் பொறுப்புதான் இப்பத்திரிகையாளரின் இலட்சியம் என்பது, இப்போது பகிரங்கமாகி வருகிறது.

கடந்த ஒருமாத காலமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்வ உரிமைக் கிளர்ச்சி, மக்கள் மன்றத்திலே கொந்தளித்துக் கிடக்கிறது. கட்சி வேற்றுமையின்றி, இந்நாட்டின் பெரும்பான்மைச்

(8-ம் பக்கம் பார்க்க)

### தோழர்களுக்கு அறிவிப்பு

—x—

"திராவிடநாடு" என்ற பெயருடன் தினசரியொன்று சென்னையிலிருந்து வெளியிடுவதற்குச் சர்க்காரிடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமான அலுவல்கள் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

## கொடி எடுக்க படை தேடினர்

### கழகக் கொடி கண்டு கலக்கம்

#### காங்கிரஸ்காரர் திருப்பணி

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாதவூர் என்ற சிற்றூரில் அறுபது அடி உயரக் கம்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி பறந்து கொண்டு இருந்ததைக் கண்ட காங்கிரஸ் 'கண்ணியவான்களுக்குப்'பொறுக்கவில்லை! அதனை எப்படி எடுப்பது என்று திட்டமிட்டுக் கண்டுபிடித்தனர் ஒரு புது முறையை—நம் இயக்கக் கொடிக்கு அருகிலேயே இராட்டை பொறித்த மூவர்ணக் கொடிபறந்துகொண்டிருந்தது. அதனை சக்கரம் பொறித்த சர்க்கார் கொடியாக மாற்றிவிட்டு ஓடினர். நம் கொடியினை எடுக்கப் போலீஸ் படையை நாடினர்.

அவர்கள் கட்டிய கொடியின் உயரத்தை விட அதிக உயரத்தில் பறக்கிறதுபுரட்சிக் கொடி, இது கூடாது! உயரத்தைக் குறைக்கவேண்டும், இல்லாவிட்டால் அந்த இடத்தைவிட்டு வேறு இடத்தில் கட்டிக்கொள்ள வேண்டும் — மறுத்தால் சிறைவாசம்! — இப்படி மிரட்டி விட்டார் தாலுகா சர்க்கிள் இன்ஸ்பெக்டர், தன்னுடன் வந்திருந்த ரிசர்வ்போலீஸ் படையினைக் காட்டி! நம் இயக்க ஆர்வங்கொண்ட நண்பர் பாண்டியன், வேண்டுமானால் அந்தக்கொடியை உயர்த்திக் கட்டிக் கொள்ளுங்கள், கழகக்கொடியை எந்தக்காரணங்கொண்டும் தாழ்த்திக் காட்டவோ, வேறு இடத்திற்கு மாற்றவோ முடியாது என்று கண்டிப்பாக மறுத்து விட்டார்.

படையைக் காட்டினர் — பலாத்காரமாக இறக்கச் செய்வேன் கொடியை என்று கடுமொழி வீசினர்! இயக்கத் தோழர்கள் தங்களுக்கு நல்ல தீர்ப்புவழங்க வேண்டும்என்று மேலூர் மேஜிஸ்ட்ரேட்டிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். கொடிபற்றிய விஷயத்தில் எவரும் தலையிடக் கூடாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதில் அழகாடி எஸ். முத்து முன் நின்று காரியங்கள் செய்து, காங்கிரசின் கண்ணியமற்ற போக்கை எதிர்த்துப் போராடினர்.

கொடியை எடுக்க படையைத் தேடுகிறது காங்கிரஸ்—வெட்கம்! அறுபதாண்டுகளைக் கடந்த காங்கிரஸ் இயக்கம், அறுபது அடிக் கம்பத்தைக் கண்டு கலக்க மடைகிறது—வேதனை! திருவாதவூர் நண்பர்கள் நீதி வழி நடந்து, நேர்மை முறையைக் கையாண்டு, கருத்து இருண்ட காங்கிரஸ்காரர்களுக்குத் தக்கதோர் பாடம் கற்பித்தது பாராட்டுக்குரிய நிகழ்ச்சி.

(ஒரு நிருபர்)

திராவிடநாடு

ஞாயிறு] 27-8-50 [காஞ்சி

# மாணவர் தந்தை மறைந்தார்!

திரண்டு சுருண்டுவரும் அலைகள், பேரிரைச்சலோடு மறைந்துவிடுகின்றன. காலையிலே அரும்பி இதழ் விரித்து மணம் பரப்பிய மலர் மாலைக்குள் கருகி உதிர்ந்துவிடுகிறது. அழகு தரும் நிலா, நிழல் பரப்பும் தரு, நினைவைக் கவரும் மேகங்கள்—எல்லாம் நிலைத்து நிற்பதில்லை!

காலம் ஓர் கடல்—அதன் அலைகளைப்போல மனித வாழ்க்கையின் ஆண்டுகள். அலை உருள்கிறது, மலர் கருகுகிறது, மாலை மறைகிறது—பிறக்கும் மனிதனும் இறக்கிறான்! அலையின் ஒலி, மலரின் மணம், வாழ்வின் நிகழ்ச்சிகள் யாவும் கடைசி நேரத்தைச் சந்தித்து மறைந்துவிடுகின்றன.

சுழன்றடிக்கும் காற்றைப்போல வாழ்க்கையின் நிகழ்ச்சிகளும் மாறிக் கொண்டேயுள்ளன. கொடியிலே நேற்றுக் கூத்தாடிய முல்லை இன்று தரையிலே கிடக்கிறது-உதிர்ந்து, கருகி, கவனிப்பாரற்று! பேரொலி எழுப்பிய அலை, அடங்கி ஒடுங்கிவிடுகிறது அடுத்த விநாடிக்குள். புகழ்ஒளிபரப்பிக்கிடந்த மனிதர் வாழ்வும் மறைந்துவிடுகிறது, காலச் சுழற்சியால்!

பிறக்கும் மனிதன் இறக்கிறான்! இறப்பும்பிறப்பும் இவ்வுலகின் நித்திய நிகழ்ச்சிகள்-கடலைப்போல. ஆயினும் சிலரது பிரிவு நமது இதயத்தைக் கசக்கிவிடுகிறது — கண்ணீரைச் சிந்தச்செய்கிறது! காலஓட்டத்தின் வேகத்தை அறிந்திருந்தாலும், நம்மோடு கூடியாடிக்கிடந்தோர் இறந்துவிட்டனர் — இனி நம்மால் காணமுடியாது என்று எண்ணியதும் இதயம் கலங்குகிறது. நெஞ்சம் தடுமாறுகிறது - நினைவுகள் கண்ணீரைச் சிந்தச் செய்கின்றன!

விண்மீன்களின் சிதறல்களைக் கண்டு மனித உள்ளம் சஞ்சலப்படுவதில்லை—அக்கரையுங்காட்டுவதில்லை. ஆனால் நிலவு முறிந்து விழுந்தால்? மனிதன் மனங் கலங்கியே தீருவான்! இருட்டைப் போக்கும் இன்ப நிலவு, இறப்பின் பெருவாய்க்குள் சென்றுவிட்டது-இனித் திரும்பாது, என்று எண்ணினாலே உயிர் துடிக்கத்தான் செய்யும்! உணர்ச்சிப் பெருக்கால் உணர்வை இழக்கத்தான் செய்வோம்!!

நேற்றுவரை நம்மோடு இருந்து, இன்முகங்காட்டி, 'வருக, வருக' என்று வரவேற்று, நகைச்சொல சிந்தி நம்மை மகிழ்வித்தவர், இன்று பிணமானார் என்று கேட்டால், நெஞ்சம் பதறித்தான் போகும்!

சேலம் கல்லூரித் தலைவர் இராமசாமி அவர்கள், சாவுலகம் சென்றுவிட்டார் என்ற தகவல் நம்மை எட்டியதும்—திகைத்தோம், தேம்பினோம்—நம்மை நாமே இழந்துவிட்டது போன்று நடுங்கினோம்! கனவோ அல்லது நனவோ என்று கலங்கினோம். நண்பர்களைக் கேட்டோம் நடுங்கியகுரலுடன்—அவர்களும் கண்ணீரைத்தான் பதிலாகத் தந்தனர்! செய்திகளைப் பிரித்தோம்—அவைகள் 'அவர் மறைந்தார்' என்ற விளக்கத்தைத்தான் தந்தன, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல!

மறைந்த அறிஞர் மனித உலகின் மாணிக்கம்—திராவிடச் சமுதாயத்தின் இருள் போக்கும் நிலா. 23 ஆண்டுகள், சேலம் கல்லூரியின் தலைவராக இருந்து அவர் பணியாற்றினார். எதிர்கால உலகைச் செப்பனிடும் சிற்பியாக இருந்தார்—சிந்தனை செல்வத்தைச் சிந்தினார். இராமசாமி அவர்கள், தமிழுலகின் செல்வர்—தனித்தமிழ்ப் புலமை படைத்த நாவலர். தமிழுக்கும், தமிழ் உலகுக்கும் பாடுபடுவதையே தனது கடமையாகக் கொண்டவர். அவர் ஒரு வெட்டுக்கிளியல்ல—மேகங்களைக் கிழித்துச்சென்று, வான வளையத்தை முத்தமிட்ட வள்ளல்! அறிவு வானத்தில் பறந்து, அங்குள்ள செய்திகளையெல்லாம் தேடித் திரட்டி மாணவருலகுக்குப் படைத்து வந்தார். அவர் இதுகாறும் ஆற்றி வந்த பணிகள், பல. அவையாவும் மக்கள் மன்றத்தை, அறிவுச் சோலையாக்கும் ஆர்வங் கலந்தவை. சேலம் கல்லூரியை, முதல் தரக் கல்லூரியாக ஆக்கி, பல வகைகளிலும் சிறந்து விளங்கும்படியாகச் செய்த பெருமை இராமசாமி அவர்களையே சாரும். பிரின்சிபால் இராமசாமி மறைந்தார் என்ற செய்திகேட்ட சேலத்து மக்கள் திகைத்தனராம் — நம்பவில்லையாம்! மாணவமணிகள், தங்களது தலைவர் 'இல்லை, போய் விட்டார்' என்று அறிந்ததும் நிலவை இழந்த வானம் போல் வருந்தினராம்!

இராமசாமி மனிதசமுதாயத்தில் ஒரு தனி மணி. எனினும், அவர் எல்லோரது இதயங்களையும் கவர்ந்து விட்டார் — தமது சுயநலமற்ற தொண்டின் மூலம் எல்லோர் நெஞ்சிலும் இடம் பெற்று விட்டார்.



தேய்ந்து கிடக்கும் திராவிட சமுதாயத்துக்கு, தனது வாழ்நாள் முழுமையும் பணியாற்றிய செம்மல் அவர். கணவரை இழந்து கலங்கி நிற்கும் கனகம்மை இராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் சுடர் விளக்கு. துணைவியாரோடு, மறைந்த செல்வர் பகுத்தறிவு உலகுக்கு ஆற்றிய பணிகள் பல. இதன் விளைவாக ஆளவந்தாரின் பார்வையும், வைதிகபுரியின் சீற்றமும் அவரை நோக்கிப் பாய்ந்ததுண்டு! எனினும் அவர் கலங்கவில்லை—கடமையை ஆற்றும் ஆர்வத்தில் அவைகள் தூசுகளாயின! அத்தகைய துணிவும், வீரமும் நிறைந்த இராமசாமி அவர்களைத்தான் 19—8—50 அன்று இரவு திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி நமது நெஞ்சத்தையெல்லாம் கலக்கிவிட்டு அவருடைய கடைசி மூச்சை காற்றோடு கலக்கச் செய்துவிட்டது! மணம் பரப்பி நின்ற மலரை உதிர்த்துவிட்டது! இருள் நிறைந்த சமுதாயத்திற்கு ஒளி தந்துகொண்டிருந்த ஒரு நிலவை மறைத்துவிட்டது!

இராமசாமி அவர்கள் மறைந்தார் என்பதையே நம்மால் நினைக்கமுடியவில்லை. 53ம் வயதை அடைந்த அவரது புன்சிரிப்பும், நகை முகமும் நமது எண்ணத்திலே நர்த்தனமாடுகின்றன! 'அவரா மறைந்தார்?' என்ற கேள்வியோடு, நம் இதயம் கலங்குகிறது. நாம் ஒரு நல்ல நண்பரை இழந்துவிட்டோம், தமிழகம் ஒரு அறிஞரை இழந்துவிட்டது, மாணவருலகு சிந்தனைத் தந்தையை இழந்துவிட்டது! திராவிடச் சமுதாயம் நிலவை இழந்த வானம் போலாகிவிட்டது!!

துணைவரை இழந்துவிட்ட தோழியர் கனகம்மையாருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், திராவிடமக்களின் சார்பில் நமது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம். தேம்பிக் கிடக்கும் மாணவருலகுக்கு நமது ஆறுதலை அர்ப்பணிக்கிறோம். வாழ்க இராமசாமி அவர்கள் புகழ்! வளர்க அவரது சேவையின் பெருமை!!

✲

1-ம் பக்கத் தொடர்ச்சி

மத்திய சர்க்கார் உணவு மந்திரி முன்ஷி வந்து போனபிறகு எதிர்பார்த்தபடி சுமுகநிலை ஏற்படவில்லை. எதிர்பார்த்த இடங்களிலெல்லாம் ஏமாற்றந்தான் அறுவடை—இதுவும் அவரது கூற்றே!

போக்கு வரவு வசதிக்குறைவும் இந்த உணவு நெருக்கடிக்குக் காரணம் என்கிறார் விக்டோரியா.

இப்படியெல்லாம் பேசியவர், டெல்லி சென்றார். என்ன கொண்டு வந்தார்? முழுதிருப்தியடைய முடியாது என்ற முனகலை! எங்கள் பஞ்சப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு பாடுகிறார்கள் என்ற முணுமுணுப்பை!

இந்த நிலைமையில்தான் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரித்து, மக்கள் மனதிலே பீதியை வளர்க்கக்கூடாது என்று பிரதமர் ராஜா பேசினார். ஆனால் எப்படி பண்டிதர் பார்வைக்குக் கொண்டுபோயும், வெறுங்கை வீரர்களாக வந்திருக்கிறார்களே!

"அழுவதாலோ, பரிதாபப் படுவதாலோ, துக்கப் பேச்சாலோ, கண்ணீராலோ பயனில்லை" என்று பேசுகிறார் விக்டோரியா. வாய்மூடியிருக்கிறோம் நாம், வயிறு சும்மாயிருந்துவிடுமா? இவர்கள் எடுத்துச் சொல்லியாவது, உணவுப் பொருள்களைக் கொண்டு வருகிறார்களா? இல்லை. பார்லிமெண்டிலே, கனம் முன்ஷி, சென்னையிலிருந்து பயங்கர நிகழ்ச்சிகள் பட்டினியால் ஏற்படுகின்றன என்று எந்த செய்தியும் வரவில்லையென்கிறாரே—வெட்கப் படுகிறார்களா ஆளவந்தார்கள் உண்மையைச் சொல்லி உதவிபெற! பத்திரிகைகாரங்களையும் கட்டிவிட்டு தங்கள் திருவாயையும் மூடிவிட்டால் நாடு என்னாகும்? பிணக்காடாகலாமா?

டெல்லி சென்று எல்லாவற்றையும் சொல்லிவிட்டோம் என்று சொல்கிறார்கள். இருந்தும் அதிக உணவு பெற்றுத் திரும்பவில்லை. வெளிநாடுகளிலிருந்தாவது அரிசியை வரவழையுங்கள் என்று பல முறை சொல்லி வந்தோம். கேட்கவில்லை. காலங்கடந்து தெளிவு பிறந்திருக்கிறது. இப்பொழுது அரிசி கேட்கலாம், அயல் நாடுகளிலென்றால் — அங்கே அவை விற்பனையாகி விட்டன, அடுத்த அறுவடைவரை பொறுத்திருக்க வேண்டியதாகி விட்டது!

உணவு நெருக்கடி வளர்ந்து வருகிறது—அதன் எதிர்கால உருவம் எப்படி எப்படி மாறுமோ அறியோம்! அது 'விசுவரூபம்' எடுக்கப் போகிறது என்பது மட்டும் உறுதியிலும் உறுதி!

பிள்ளையை விற்கிறார்கள்! பிண்ணாக்கைத் தின்கிறார்கள், தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று தினந்தினம் செய்திகள் வந்து குவிகின்றன. விக்டோரியா வேதனையடைகிறாரா, விழிப்போடு காரியமாற்றி பசி போக்க வழி காட்டுகிறாரா என்றால் பதில்சொல்ல முடியவில்லை.

மத்திய மந்திரி முன்ஷியார் விசித்திர யோசனைகளை உதிர்த்த வண்ணமே உள்ளார். நாட்டு மந்திரிசபையோ, மத்திய அரசாங்கத்தோடு ஓடுகிறது — பிறகு முகத்தில் கரியைப் பூசிக்கொண்டு திரும்புகிறது.

டெல்லிக்குச் சென்றார்கள், பிரதமர் ராஜாவும், உணவு மந்திரி ரோச் விக்டோரியாவும்! திரும்பியிருக்கின்றனர், தேம்பி யழும் தாயகத்திற்கு, தந்துள்ளனர் இல்லை என்ற பல்லவியை—தேறுதல் மொழியையோ, ஆறுதல் உறுதி உரையையோ, நம்பிக்கையூட்டும் நற்செய்தியைச்சொல்லவில்லை.

இங்கே பசியென்றால், அங்கே கேள்—இந்த நிலை வளர்ந்தால் நான் என்ன கேட்பது, அவர்கள் என்ன கொடுப்பது என்ற நிலையாக மாறிவிட்டால் வடநாடு—தென்னாடு போராக மாறாதா? நமது திராவிடநாடு இலட்சியம் ஈடேற எத்தனை வகையான சூழ்நிலைகள் எதிர்காலத்தில் ஏற்படும் என்று இப்பொழுது யூகிக்கவும் முடியவில்லை. உணவு நிலை அவ்வளவு விரைவாக வர்ளந்து வருகிறது.

விக்டோரியா படும் வேதனை—மந்திரியாரின் மனக்கலக்கம் என்ற அளவில் நின்றுவிடாது—வேதனை விரியும்! பிறகு விசித்திர விளைவைத் தான் தரும்.

# கொக்கு பிடிக்க வெண்ணெய் தருகிறார்

## புண்ணை மறைக்க புனுகு பூசுவதா?

## திவேகார் கமிட்டி தரும் திட்டம்

—(வில்)—

"ஏங்க, நீங்க என்ன வருணங்க?"

"கருப்புமில்லை, சிகப்புமில்லே — நடுத்தரந் தான்"

"அட, நிறத்தைக் கேக்கலீங்க, குலத்தைக் கேட்கிறேன்"

"குலமா........"

"அட உங்க சாதியை......"

"ஓ, நான் செட்டியார்"

"செட்டியார் என்றால் அதில் எத்தனையோ பிரிவுகள் உண்டே—நாட்டுக்கோட்டையார், கோமுட்டியார், இலைவாணியர், தேங்காய்ச்செட்டி, பொறையாரார், எருக்காட்டான் சேரியார், சேனைத்தலைவர், செக்குடையார், சேடர், சேணியர், தறிகாரர், கப்பல்காரர், மஞ்சள்செட்டி, வளையல் வாணியர், வெளிப்பாளையத்தார், புதுவை முதலி, தஞ்சை வகையரா இப்படி எத்தனையோ சொல்வார்களே—அதில்......?"

"சேனைத்தலைவர்"

"அதில் இரண்டு பிரிவுண்டே—தெலுங்கு பேசுவோர், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்று!"

"தமிழ் பேசுவோர்"

"அதிலேயும் இரண்டு பிரிவுண்டே—கடல் கடந்து சென்றிடும் பரம்பரை, உள்நாட்டிலேயே இருப்பவர் என்று!"

"அயல் நாடு போவதையே வெறுக்கிற பகுதி"

"அதிலேயும் இரண்டுண்டே — வைணவர், சைவர் என்று!"

"வைணவர் தான்"

"அதிலேயும் வடகலை, தென்கலையென..."

"ஆமாம், வடகலை"

"அப்படியே இருந்தாலும், அதிலேயே புலால் புசிப்பவர், சைவ உணவு ஏற்பவர் என்று இரண்டு......"

"மாமிசம் சாப்பிடாத சைவச் செட்டி...... காலங் கெட்டுக் கிடக்கு! நான் சைவம் — நம்ம வீட்டுப் பயல்களுக்கு ஒண்ணும் தள்ளுபடியில்லே; குளம்பும், கொம்பும் தவிர!"

இருவரிடையே நடக்கும் இந்த உரையாடல் நமக்குப் புதிதல்ல—தினந்தினம், திண்ணைக்குத் திண்ணை தெருவுக்குத் தெரு, பழகிவரும் பரம்பரைச் சம்பாஷணை!

நம் சமூகம் அப்படிப் பிரிந்து கிடக்கிறது—சாதியின் பேரால், குலத்தின் பேரால், மதத்தின் பேரால்! அக்குவேறு, ஆணிவேறாக்கப்பட்டுக் கிடக்கிறது. 'ஆயிரம் உண்டிங்கு சாதி, எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி' யென்று கேட்டார் பாரதியார். சாதிகள் ஏதுக்கடி பாப்பா என்று கூறிவிட்டார், பிறகு! வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும் என்று கேலியோடு உண்மையைக் காட்டிவிட்டார் பாரதிதாசன்.

சாதிகள் இங்கு சமூகத்தைச் சின்னா பின்னமாக்கிச் சிதைத்து விட்டன. சாதி யொழிந்தால் தான் சாந்தி நிலவும் நாட்டில் — இப்படிக் கூறாத முனிவரில்லை, ஆழ்வாரில்லை, நாயன்மாரில்லை! சாதி கூடாது — என்று பேசாத அரசியல் வாதி, சமூகப் புரட்சிக்காரர்களை பார்க்கமுடியாது!

சாதி கூடாது—இதில் எவருக்கும் சந்தேகம் இல்லை. ஒழித்துக் கட்டவேண்டும் என்று ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

சாதி—சமூகப்பிரிவினைத் திட்டம் ஒழிக!—இந்தக்குரல் எல்லா மூலைகளிலிருந்தும் கேட்கிறது. விடுதலை, விடுதலை, பறையருக்கும் புலையருக்கும் விடுதலை என்று முழங்கி விடுகிறான் தேசியவாதி—சாதி, மத பேதங்களை வேரோடு சாய்த்திட வேண்டும் என்கிறான் சீர்திருத்தக்காரன். சாதி மத பேதமெல்லாம் பித்துப் பிள்ளை விளையாட்டு என்று கூறுகிறான் வைதிகன், ஆண்டவன் படைப்பிலே மேலென்ன, கீழென்ன என்று கூறுகிறான் பாமரன்—சமயங்களில்!

தாங்க முடியாத கொடுமை, இந்தச் சாதிச் சனியனால் ஏற்படுகிறது. ஒரே சாதி, அதில் ஒன்பதாயிரம் கோணல்கள்! முதலியார் என்றால் அதில் முப்பத்தெட்டு உட்பிரிவுகள். அதிலே பெண் கொடுப்பு, எடுப்பு இல்லை என்ற பெருமைப் பேச்சு, 'நாங்க அவர்கள் வீட்டிலே தாகந் தணிக்கத் தண்ணீர்கூட வாங்க மாட்டோம்' என்ற வீண் அகம்பாவம், ஒரு சாதி மக்கள் விருந்திலே கூட கூடத்திலே உட்காருபவர், தெரு நடையில் உட்காருபவர், திண்ணையில் அமர்பவர் என்ற பேதாபேதங்கள்! சாதியின் பெயரால் எத்தனை சண்டைகள், குத்து, வெட்டுக் கோரங்கள் — அடிதடி அலங்கோலங்கள்!

ஆகவேதான் நாயன்மார்கள் நடுங்கினர், ஆழ்வார்கள் அழுதே போயினர்—நாட்டு நலம்விரும்பிகள் எல்லோருமே எதிர்த்தனர்! சாதிக்கொடுமையை விரட்ட ஒருமுக ஆதரவு இருந்தது—இருக்கிறது.

X X X

"இது டைபாய்டு ஜுரம்" என்கிறார் டாக்டர் சேகர்.

"பித்தம் பெருத்துப் போச்சு!" என்கிறார் சித்தவைத்திய வள்ளல் சிந்தாமணிப் பண்டிதர்.

"கிரக பலன் சரியில்லை. ஐந்தாமிடத்தில் சனியிருக்கிறான். சனி குருவைப் பார்க்கிறான், குரு மூன்றாமிடத்துச்செவ்வாயைப் பார்ப்பதாலே ரோகம், நோய் எல்லாம் வரும்" என்று கூறுகிறான் சோதிட சிகாமணி சொக்குப் பண்டாரம். "எவனோ சூனியம் வைத்து விட்டான்" இப்படிச் சொன்னான் மந்திரக்கார மாயாண்டித் தேவன்.

"பயந்திருக்கணும்—மூலைக்கொத்தா முனியன் சேட்டை இது"—வியாதி விளக்கம், பூசாரி பெருங்கருப்பன் வாயிலிருந்து இப்படி வருகிறது.

நோயாளி விழிக்கிறான். ஒரு வியாதி—இத்தனை வகைக் காரணங்கள்! இதனை நீக்க மருந்து கேட்டால் என்னென்ன சொல்வார்களோ, யார் கண்டார்கள்!

சமூகம் இந்த நோயாளியின் நிலைமையில் தான்—நோயை ஒத்துக் கொள்கிறார்கள், சாதி கூடாது என்பதன் மூலம்! அதன் அடிப்படைக் காரணத்தில் வித்தியாசப்படுகிறார்கள். அதனை விரட்டியடிக்கும் முறையிலும் மாறுபடுகிறார்கள்!

சாதி பேதங்களைத் தகர்த்திடத் திவேகார் கமிட்டி என்ற பெயரால் ஒரு அமைப்பை ஏற்பாடு செய்தார்கள், இந்திய சர்க்கார். அவர்கள் நாடு முழுவதும் சுற்றி, சாதிச் சஞ்சலம், மதக் கோளாறு, சமூக சங்கடம், இனப்பிரிவு, பிறப்பால் உயர்வு, தாழ்வு இவைகளை ஆராய்ந்து பார்த்தனர். கடைசியில் தங்கள் சிபார்சுகளைச் சர்க்காரிடம் ஒப்படைத்தனர்.

நாடு சுற்றிய திவேகாருக்குத் தெரிந்திருக்கும் இந்த நாட்டு வகுப்புவாதிகள் சாதி என்ற நஞ்சை எப்படிப் பாமரரின் இரத்தத்தில், நரம்புகளில், எலும்புகளில், தசையில் ஊறிடும்படி செய்துவிட்டார்கள் என்ற உண்மை!

கடல் மணலையும் எண்ணலாம், கட்டழகியின் கூந்தலைக் கூட கணக்கிட்டு விடலாம், விண்மீன்களைக் கூட எண்ணமுடியும். ஆனால் இந்தச் சதிகாரச் சாதிகளை எண்ணவே முடியாது.

சமூகத்தில் தாழ்ந்து கிடக்கும் சாதிகளைப் பாருங்கள்:—அகமுடையார், அம்பலக்காரர், வில்

(8-ம் பக்கம் பார்க்க)

### தலைமை நிலையம்

திராவிட முன்னேற்றக் கழக சம்பந்தமான கடிதங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிட முன்னேற்றக் கழக
தலைமை நிலையம்
202, தங்கசாலைத் தெரு
சென்னை—1

## அடுத்த அம்பைத்தொடுத்துவிட்டனர்

### சமூக நீதிக்கு மற்றொரு எதிர்ப்பு

அவர்கள் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகிவிட்டது — அவர்கள் ஓய்ந்து விடவில்லை, சாய்ந்து விடவில்லை! தொடர்ந்து தங்கள் சூதுச் சரங்களை ஏவிடத் தயங்கவில்லை.

உயர் நீதி மன்றத்தில் கே. ஜி. மோகன் பக்தா என்பவர் சர்க்கார் மீது மனு கொடுத்து விட்டார். மருத்துவக் கல்லூரியில் சேர மனு செய்ததாகவும், தனக்கு இடங்கிடைக்கவில்லையென்றும், இதற்குக் காரணம் சர்க்கார் கையாண்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையென்றும் கூறி 'நீதி' வேண்டி விண்ணப்பம் செய்துவிட்டார். நீதிபதிகள் இதனை ஏற்று ஆட்சியாளருக்கு தாக்கீது அனுப்பிவிட்டனர்.

கல்லூரிகளில் மாணவர்களை, வகுப்புவாரி முறைப்படி தேர்தல் என்ற திட்டத்தில் அனுமதித்த பொழுது அவர் மருத்துவக் கல்லூரியில் சேர விண்ணப்பித்தார். அனுமதிக்கப் பட்டவர்களின் பட்டியலில் அவர் பெயர் இல்லை. விட்டார அடிப்படையில் மாணவர் சேர்க்கப்பட்ட பொழுதும் இவருக்கு இடமில்லை. தான் பிராமணனாக பிறந்து விட்டாலும், சாதியின் பெயரால் மட்டும் அவருக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான உரிமையைப் பறிக்கக் கூடாது என்று தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆம், அவர்கள், நாட்டவரின் நெஞ்சகொதிக்கும் கொப்பரையாக இருப்பதை அறிந்தும் தங்கள் வேலையை நிறுத்தவில்லை—தொடர்ந்து நடக்கிறார்கள் சூதுப்பாதையில்! தொல்லைவந்து சேரும் அதனால் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை. வெந்த புண்ணிலே ஈட்டி பாய்கிறது—எரியுந் தீயிலே எண்ணெய் ஊற்றப்படுகிறது! சமூக நீதிக்கு சமாதி கட்டிவிட்டதாக எண்ணிக்கொண்டு, மேலும் மேலும் துன்ப வீதியிலே துரத்தியடிக்கிறார்கள், வஞ்சகமே வாழ்க்கை வியாபாரத்திற்கு முதலாகக் கொண்டவர்கள், பின்வரும் புயலைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல்! செய்ய முடிந்ததையெல்லாம் செய்து பார்க்கட்டும்—அதனால் ஆபத்து இல்லை, நமக்கு — அவர்களுக்கு அந்த உண்மையை மிக விரைவில் உணர்த்திவிடும், நாடு!

# புத்தெழுச்சியின் புரட்சி முரசு

## சமநீதிப் போர்—மக்கள் போரணி

குமுறும் எரிமலையாக உள்ளனர் நாட்டு மக்கள்—சமூக நீதியைத் தவிடுபொடியாக்கத் தகுதி, திறமை யென்ற தந்திராயுதங்களைத் தகிடுதத்தக்காரர்கள் தயாரித்துவிட்டனர். இதற்கு சட்டத்தின் துணையை அடைந்துவிட்டனர். இந்த சேதி கேட்ட நாளிலிருந்து நாட்டவர் அடங்காத கோபத்தோடு உலவுகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், திராவிட இனத்திற்கு ஏற்பட்ட இந்த திடீர் தாக்குதலை எதிர்த்து அங்கங்கே போரிடுகின்றனர்.

சென்ற வாரம் வந்த செய்திகள் சில—அதனைத் தொடர்ந்து இந்த வாரமும் அறப்போர்ச் செய்திகள் தரப்படுகின்றன.

### சின்ன சேலம்

14-8-50-ல் சின்ன சேலம் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அனைவரும் 'வகுப்பு விகிதாசார முறை வாழ்க' 'அரசியல் சட்டத்தைத் திருத்துக' என்ற முழக்கங்களுடன் நகரின் பெரு வீதிகளின் வழியாக ஊர்வலம் சென்றனர்.

### பொது முன்னணி!

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், பார்வர்ட் பிளாக், இன்னும் பல அரசியல் கருத்து கொண்டோர் அனைவரும் கூடினர், திண்டுக்கல்லில். 14-8-50-ல் மாரியம்மன் திடலிலிருந்து ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட்டு நகர் முழுவதும் சுற்றி வந்தனர்—இலட்சிய முழக்கங்களை ஒலித்தபடி, வகுப்பு விகிதாசார முறையை ஆதரிக்கும் கருத்துகள் அடங்கிய அட்டைகளைத் தாங்கியபடி! குதிரைகளிலிருந்து இரண்டு தோழர்கள் ஊர்வலத்திற்கு முன் சென்றனர். நூற்றுக்கணக்கான சைக்கில்களில் தோழர்கள் தொடர்ந்து வந்தனர். ஊர்வலத்தை மாணவத்தோழர் S. R S. மணி B. A. தலைமை வகித்து நடத்தினார். காலை 11 மணிக்கு ஊர்வலம் முடிந்தது. தி. மு. க. செயலாளர் முத்து நன்றி கூறினார்.

### தமிழ்ச் சங்கத்தில்!

வாணியம்பாடி பெரிய பேட்டைத் தமிழ்ச் சங்க ஆதரவில் 14—8—50 இரவு 8-30 மணிக்கு கெங்காதரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பலர் பேசினர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அமுலில் இருந்தே ஆகவேண்டும், அதற்கேற்ப அரசியல் சட்டத்தை மாற்றுக என்றும் சென்னை சர்க்காரை வேண்டித் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### சூளுரைத்தனர்!

14—8—50-திங்கட்கிழமை காலை மேட்டூர் அணை அரசியலார் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் வகுப்புவாரி உத்தரவு நீக்கத்தை எதிர்த்து அனுதாப வேலை நிறுத்தம் செய்தனர் ஐந்து, ஆறு படிவ மாணவர்களின் முயற்சிகளின் பேரில் ஒன்று முதல் மூன்று வரையுள்ள மாணவ மாணவிகளையும் போராட்டத்தில் கலந்து கொள்ளச் செய்தனர். யாவரும் பலாத்காரத்தின் மூலமோ, வற்புறுத்துவதன் மூலமாகவோ கலந்துகொள்ளவில்லை. காலையில் சுமார் எட்டு மணிக்கு மறியல் ஆரம்பித்து 10-மணிவரை நடந்தது. 10-மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது. பொதுமக்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு உதவியளித்தனர்.

மாணவ மாணவிகள் "கம்யூனல் ஜீ. ஓவை அடைந்தே தீருவோம்" என்று முழக்கமிட்டுச் சென்றனர். ஊர்வலம் இடையில் கலையாமலும் கலைக்கப்படாமலும் வீதி வீதியாகச் சுற்றியது. ஊர்வலத்தில் சுமார் 500 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். சுமார் 12-மணிக்குப் பள்ளி விளையாட்டு இடத்தில் கூடி ஒரு பொதுக் கூட்டம் நடத்தினர். மாணவத் தோழர் சென்னியப்பன் தலைமை வகித்தார். இரத்தினசாமி பேசினார். பேச்சிற்குப் பிறகு செயலாளர் கோவிந்தராசு, மாணவ மாணவிகள் செய்த இவ்வனுதாப வேலைநிறுத்தம்-கம்யூனல் ஜி. ஓ. நீக்கத்தால் பெரும்பான்மை மாணவ மாணவிகளுக்கு பெரும் இழுக்கை, உண்டுபண்ணுகிறது, இரு மாணவர்கள் எதிர்த்து பணத்தால் போராடி கவிழ்க்க இத்திட்டத்தை பல மாணவர்கள் பகுத்தறிவுடன் போராடி மீண்டும் அடைய கண்டிப்பாய் முயற்சிப்போம், மாணவர்கள் மனம் மாற்றம் அடைய ஏற்பாடுகள் செய்யப்படவில்லையானால் நாங்கள் எங்கள் போராட்டத்தை ஆரம்பிப்போம் என்ற மாணவர்களின் திரண்ட எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது—என்ற அறிக்கையை வாசித்தார். மாணவர்கள் இந்தச் சூளுரையை ஏற்றுக்கலைந்து சென்றனர்.

அன்று மாலை சேலம் கேம்பில் தோழர் அ. ரத்தனசாமி தலைமையில் தோழர் இரா நெடுஞ்செழியன் M. A. பேசினார் கூட்டத்திற்கு சுமார் 5000 பொதுமக்களும், தொழிலாளரும் குழுமி இருந்தனர்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு திராவிட சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கின்றது என்றும், இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

### வாணியம்பாடி

எல்லாக் கட்சிகளின் சார்பிலும், 14-8-50ல் கடையடைப்பு, பள்ளி செல்ல மறுப்பு, கூட்டம், ஊர்வலம் முதலியவை நடத்தி, கம்யூனல் ஜி. ஓ. வுக்கு ஆதரவு காட்டத் தீர்மானிக்கப்பட்டு, அன்றைய நிகழ்ச்சிகளைக் கண்காணிக்க ஒரு பொது அமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. காங்கிரஸ் கட்சி, திராவிடர் கழகம் சோஷியலிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், ஷெட்யூல்ட் காஸ்ட் பெடரேஷன் முதலிய இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், நகர வியாபாரிகள், பெரியவர்களும் சேர்ந்தே துண்டு அறிக்கை வெளியிட்டனர். 14—8—50ல் ஊர்வலம், கழகக் கட்டிடத்திலிருந்து புறப்பட்டுச் சென்று பல வீதிகளைச் சுற்றி பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்தை வந்தடைந்தது. வி. எஸ். விசுவநாதன் தலைமை வகித்தார். பலர் பேசினர். இந்த நிகழ்ச்சியில் எல்லா கிராம தி. மு. க. தோழர்களையும் கலந்து கொள்ளச் செய்து வெற்றி பெறவேண்டி, தி மு. க. செயலாளர் எம். பி. வடிவேலு துண்டு வெளியீடுகள் வெளியிட்டார். கம்யூனல் ஜி. ஓ. பிரச்சினையில் பொது முன்னணியின் மூலம் தான் முயற்சி எடுக்க வேண்டும் என்ற கருத்தினை யொட்டி வாணியம்பாடித் தோழர்கள் ஊர்வலம், கூட்டம் ஆகியவைகளை நடத்தினர்.

### அமெரிக்கன் கல்லூரி ஆதரவு.

மதுரை அமெரிக்கன் கல்லூரி காலேஜ் யூனியன் சார்பாக 14—8—50 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பேரவை மாணவத் தலைவர் வேதக்கண் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை உத்தரவு பற்றி வெகு விளக்கமாகப் பேசினர். பேச்சில் முருகேசன், முத்தியாலு, வீரபத்திரன் பெரும் பங்கு கொண்டனர். வகுப்புவாரி முறை நீடிக்கச் செய்ய சென்னை சர்க்கார் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைக் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்படி இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், சென்னை முதலமைச்சர், கல்வி மந்திரி மாதவ மேனன் ஆகியோருக்கு அனுப்பப்பட்டன.

### மாணவரும் பொது மக்களும்

கிருஷ்ணகிரி போர்டு உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் 14—8—50 அன்று பள்ளி செல்ல மறுத்ததோடு, வழிகளில் நின்று பள்ளி செல்பவர்களையும் அன்போடு தடுத்து, ஆர்வத்தோடு வேலை நிறுத்தம் பற்றிய விளக்கம் தந்து, இன்முகத்தோடு அவர்கள் தரும் ஆதரவைத் திரட்டினர்—பிறகு ஆயிரக் கணக்கான மாணவர்களும், பொதுமக்களும் சேர்ந்து ஊர்வலமாக காலை 10-30 மணிக்குப் புறப்பட்டு உயர்நிலைப் பள்ளியிலிருந்து புதுப்பேட்டை, பழையபேட்டை ஆகிய இருபெரும் நகர்களையும் சுற்றிவந்தனர், வகுப்பு நீதியை ஆதரிக்கும் இலட்சிய முழக்கங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிய அட்டைகளை ஏந்தியிருந்தனர். 12-30 மணிக்கு காரனேஷன் மைதானத்தில் வந்து ஊர்வலம் முடிந்தது.

மாலை 6 மணிக்கு, நகரப் பிரபல வியாபாரி கோவிந்தராஜலு தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. மாணவ நண்பர், தாது, கம்யூனிஸ்டு பிரமுகர் அண்ணாஜி, காங்கிரஸ் பஞ்சாயத்துக் கமிட்டி உறுப்பினர் சுந்தரம், சேலம் ஜில்லா போர்டு உறுப்பினர் இராவ்பகதூர் சி. துரைசாமி, பெண்ணாகரம் பாவலர், திராவிடர் கழகத் தோழர் வி. எஸ். நடேசன், தி. மு. க. நண்பர் முனிசாமி, மாணவ மணிகள் சபி, அகமத் ஆகியோர் நீண்டநேரம் பேசினர். உயர்நீதிமன்றத் தீர்ப்பால் உள்ளம் இடிந்துகிடக்கும் திராவிட சமுதாயத்திற்கு நம்பிக்கையூட்டும் வகையில் சென்னை சர்க்கார் எந்த எதிர்ப்பு வரினும் அஞ்சாது தனது கடமையைச் செய்யவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(அடுத்த பக்கத்தில்)

## ஓரவஞ்சனையை ஒழித்துக்கட்டுவோம்!

## அண்ணாமலைநகர் மாணவர் எக்காளம்

அறப்போர் ஆரம்பமாகிவிட்டது என்று வீரப்பண்பாடி, பொறுத்தது போதும், புறப்படுங்கள் போர்க்களத்திற்கு. வகுப்புவெறியை வெட்டி வீழ்த்துவோம், ஒருசார்புத் தீர்ப்பு, ஓரவஞ்சனை, சூழ்ச்சி, எதுவாயினும் ஒழித்து விடுவோம் என்று முழக்கமிட்டுக் கூடினர் மாணவ மறவர்கள் 14—8—50 அன்று காலை அண்ணாமலைநகர் பல்கலைக் கழக மாணவர் யாவரும் ஒருங்கு கூடி, வகுப்பு நீதிக்குத் தங்கள் ஆதரவு உண்டென்று சொல்ல, அன்று கல்லூரிக்குச் செல்லலாகாது என்று முடிவுசெய்து அதன்படி மற்றவர்களையும் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொண்டனர். நமது திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் முன்னின்று காரியங்கள் செய்தனர்.

காலை 9-மணியிலிருந்து கல்லூரி வாயிலிலும், உணவுவிடுதி வாயிலிலும் நின்று மாணவர்களை வேண்டினர்.

மாணவ மாணவிகள் எல்லோரும் சமூகநீதியின் அவசியம் உணர்ந்தவர்கள்—ஆகவே கேட்பதற்கு முன்னாலேயே ஒத்துழைப்பு தந்தனர், உவகைப் பெருக்குடன்! ஆயிரவருக்குமேல் பெருவெள்ளமெனத் திரண்டனர். பிறகு ஊர்வலம் கிளம்பிற்று. 'இந்திய அரசியல் திட்டத்தைத் திருத்து, இல்லாவிட்டால் தலைமுழுகு' 'மக்கள் எண்ணிக்கைப்படி இடம் தரவேண்டும்' 'தகுதி, திறமைப்பேச்சு தகிடுதத்தத் திட்டம்' 'கல்வித் துறையில் ஒருசாரார் ஆதிக்கம் கூடாது' 'உழைப்போன் வாட, உழையாதவன்பரம்பரையாக உண்டு கொழுப்பதா?' 'அணையை உடைக்காதீர், வெள்ளம் கரைபுரளும்' என்று வானைமுட்டிட எழுச்சி முழக்கங்களை எழுப்பினர். வகுப்புவாதிகள் கதிகலங்கிப் போயினர் சூது மதியினர், தங்கள் சூழ்ச்சிகளைய இனி சுருட்டிட வேண்டியது தான் எனப் பதுங்க இடந்தேடினர். காளைகளின் எக்காளம் கண்டு கலங்கிப் போயினர், எதிரிகள்! பல இலட்சியச் சொற்றொடர்களை எழுதிய அட்டைகளை ஏந்தி அவர்கள் நகரின் முக்கிய பகுதிகளில் சுற்றிவந்தது பார்க்க பரவசமாய், கேட்க கீதமாய், சொல்லச் சுவையுடையதாய் அமைந்திருந்தது!

மணி 12க்கு வி. வி. இளஞ்செழியன் தலைமையில் குளக்கரையில் கூடினர். மாணவத் தோழர்கள் இருசப் பிள்ளை, பாலசுப்ரமணியம், ராஜேந்திரன், இராவணன், ரங்கநாதன், கலைக்கோ, தொல்காப்பியன், சத்தியநாராயணன், ஹாஜ்முகம்மது, மணியன், அண்ணாமலை ஆகியோர் பேசினர். எவ்வழியில் வெற்றிகிட்டினும், அம்முறைகளையெல்லாம் கையாண்டு கம்யூனல் ஜி. ஓவை நிலைநாட்டவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினர். கே. ஏ. கிருஷ்ணசாமி இறுதியில்நன்றிகூறினர்.

# சமூகநீதிக்குச் சாவுக் குழியா?

## சகியோம் என மாணவர் முழக்கம்

### ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் தீர்ப்பு

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலே மாணவர்கள் தங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டனர். சமூக நீதிக்கு சாவுக்குழி வெட்டிய சதிகாரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துவிட்டனர்! 16—8—50ல் பிரின்ஸ்பால் டாக்டர் அனந்தநாராயண அய்யர் B. A.,M.B., B.S.,M.Sc. தலைமையில் நடந்த மாணவர்கள் கூட்டத்திற்குக் கல்லூரி மாணவ மாணவிகள் அனைவரும் ஒருமுகமாகத் தவறாது வந்திருந்தனர். மண்டபம் வழிய வழிய மாணவர்கள் கூடியிருந்தனர். கம்யூனல் ஜி. ஓ. வேண்டுமா என்ற விவாதம் வெகு நேரம் நடந்தது. இரண்டு முப்புரி மாணவர் எதிர்த்துப் பேசினர். மற்ற ஒன்பது திராவிடச் சிங்கங்கள் அவர்களின் வீணுரையை அணுவுக்கணு தாக்கினர். வகுப்பு வெறிக்கு வக்காலத்து வாங்கிய இருவரும் வாய் திறந்தபொழுதும் கைதட்டி தங்கள் வெறுப்பினை வெளியிட்டனர் மாணவர்கள். கல்வித் துறையில் பிற்போக்கான சமூகங்கள் இதர சமூகங்களோடு சமத்துவம் அடையும்வரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை நீடிக்கச் செய்ய ஆவனவற்றை சென்னை அரசாங்கம் செய்யவேண்டும் என்று ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒருமனதாக நின்று வேண்டுகின்றனர் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எதிர்த்தவர் ஒன்பது பேர்—'அவர்கள்' எண்ணிக்கையில் 123 பேர்களிருந்தும், மற்றவர் ஆதரிக்க மறுத்துவிட்டனர். போற்றுதற்குரிய நிகழ்ச்சி!

தலைமை வகித்த பிரின்ஸ்பால், கம்யூனல் ஜி. ஓவை தான் ஆதரிப்பதாகக் கூறினர். இன்னும் 20 அல்லது 30 ஆண்டுகள் கழித்து தகுதிக்கென 1% அல்லது 2% ஒதுக்கி, அந்த எண்ணைச் சிறிது சிறிதாக விரிவாக்கிக் கடைசியில் கம்யூனல் ஜி. ஓ. வை எடுத்துவிடலாம் என்றார். இதனையே பல்கலைக் கழகக் கமிஷன் வந்தபொழுதும் கூறியதாகச்சொன்னர். மாணவர்கள் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்வேண்டும்' என்று முழக்கினர்.

✱

(முன் பக்கத் தொடர்ச்சி)

கோதண்டராம் நன்றி கூறலுடன் கூட்டம் முடிந்தது.

கிருஷ்ணகிரி மாணவப்படையின் போர் முறைகண்டு பொறிகலங்கி விட்டனர் சூதுலக வாசிகள்—துண்டறிக் கைகள்மூலம் சமூகநீதியின் அவசியத்தை அடிக்கடி வற்புறுத்தினர். சுவர்களில் தீட்டுவதன்மூலம் அந்த நினைப்பு மக்கள் மனதிலிருந்து மடியாமலிருக்கப் பார்த்துக்கொண்டனர். தெருத் தெருவாய் சென்று 'மெக்கபோன்' மூலம் வேறு பேசினர். பொதுமக்களும், வியாபாரிகளும் முழுஒத்துழைப்பைத் தந்தனர்.

### ஆரணி மாணவ அணிவகுப்பு

14—8—50 அன்று ஆரணி டவுன் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் பள்ளி செல்லவில்லை. அணிவகுத்து நின்றனர். பார்ப்பன மாணவர்களும் ஒத்துழைத்தனர். சமூகநீதிக்குஆதரவான முழக்கங்களிட்டு ஊரின் பிரதான பகுதிகளில் சுற்றிவிட்டு கோட்டைவெளியில் மாணவத்தோழர் அண்ணாமலை தலைமையில் கூடினர். ஏராளமான பொதுமக்களும், வியாபாரிகளும் வந்து குழுமியிருந்தனர். சேடன், அண்ணாமலை ஆகியோர் பேசினர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பிற்பட்ட சமூகத்தினரின் நல்வாழ்விற்குத் தேவையானது என்று விளக்கினர். சீக். கண்ணன் நன்றிகூற, 'சமூகநீதி ஓங்குக' 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைவேண்டும்' என்ற முழக்கங்களுடன் மாணவப்படை கலைந்தது,

### மணப்பாரை மாணவர்

மணப்பாரை உயர் நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவரும் 14—8—50ல் கூடி ஊர்வலம் நடத்தினர். வகுப்புவாரி விகிதாசாரமுறையின் அவசியத்தை வலியுறுத்திடும் முழக்கங்களையிட்ட வண்ணம் நகர் முழுவதும் சுற்றிவந்தனர்.

அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்திற்குத் திராவிடர் கழகத்தோழர் சின்னையா தலைமை வகித்தார். மாணவர் முத்துசாமி, திருச்சி டி.கே. சீனுவாசன், இனியன், முஸ்லிம்லீக் லீடர் ஏ. கே. எஸ். இப்ராகீம், 'சமரசம்' ஆசிரியர் சுல்தான் பக்தாதி ஆகியோர் பேசினர்.

### திருக்கோவிலூர் காட்டிய திடம்!

14—8—50ல் திருக்கோவிலூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சுமார் 600 பேர், தி. வெற்றிவீரன் தலைமையில் காலை 9-30 மணிக்கு பள்ளி விளையாட்டு மைதானத்திலிருந்து ஊர்வலமாக கிளம்பி முக்கிய வீதிகள் வழியாகவும், சந்தப் பேட்டை வழியாகவும் சுற்றிவந்தனர். வழிநெடுக "சமூக நீதி வேண்டும்" "கம்யூனல் G. O. வைக் கொணர்க" போன்ற பேரொலிகளை எழுப்பினர். ஒரு சில சுயநலமிகள் மாணவர்களை அணுகி, இது திராவிட இயக்கத்தார் ஊர்வலம், இதில் கலந்துகொள்ள வேண்டாம் என்றெல்லாம் சூழ்ச்சி செய்து பார்த்தனர். ஆயினும் மாணவர்கள் இவர்களின் வார்த்தைகளை துச்சமெனத் தள்ளிவிட்டுத் தம் இலட்சியப் பாதையே சென்றனர், அவர்களெல்லாம் வெட்கித் தலைகுனியும்படியாக!

### முக்கூட்டு முன்னணி

அரியலூரில் 14—8—50 அன்று பள்ளி மாணவர்களில் முக்கியமான சிலர் பள்ளியின் முன்பு நின்றுகொண்டு கம்யூனல் ஜி. ஓ. வின் அவசியத்தைக் கூறி, அதற்காக அவர்களின் அதிருப்தியை அரசியலார்க்கு அறிவிக்க அன்று பள்ளி செல்லவேண்டாமெனத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டனர். அதற்கிணங்க எல்லா மாணவர்களும் சேர்ந்து ஒத்துழைத்தனர். பார்ப்பன பையன்களில் சிலரும் பள்ளிக்குச் செல்லவில்லை. சரியாக அன்று காலை 10 மணிக்கு பள்ளிக்குப் பக்கத்திலுள்ள சந்தைப்பேட்டையில் ஊர்வலம் தொடங்கியது. ஊர்வலத்தில், 'கம்யூனல் ஜி. ஓ. தேவை', 'இந்திய அரசியல் திட்டத்தை மாற்றுக' என்று எழுதப்பட்ட அட்டைகளைத் தாங்கி சுமார் 20 சைக்கில்கள் முன் சென்றன. ஊர்வலம் நகரின் பல முக்கிய தெருக்களின் வழியே சென்றது. வியாபாரிகள் தத்தம் கடைகளை மூடி மாணவர்களுக்கு ஆதரவு நல்கினர். பொதுமக்களும், தொழிலாளிகளும், வியாபாரிகளும் ஊர்வலத்தில் கலந்துகொண்டு மாணவர்களோடு, 'கம்யூனல் ஜி. ஓ. தேவை' 'வெற்றி நமக்கே' போன்ற கோஷங்களை வானதிர எழுப்பினர். பிறகு ஊர்வலம் தாலுகா சாவடி முன்வந்து சுமார் 12-30க்கு நன்றி கூறுதலோடு இனிது முடிந்தது.

அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் மாணவர் தங்கவேலு, எம். ஆர். செல்லப்பா (தி. மு. க.) பி. ஆர். சின்னசாமி (தி. க.) பேசினர். காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த சுப்பிரமணியனார் தலைமை தாங்கினர். சேப்பெருமாள் நன்றி கூறினர். சமூகநீதி அழியாமல் பாதுகாக்க ஆவன செய்யக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அரியலூர் காட்டும் ஆர்வம் அனைவரும் பின்பற்ற வேண்டிய நல்ல முயற்சி—அவர்கள் அமைத்துக்கொண்ட ஐக்கிய முன்னணி வெற்றிக்குரிய ஏற்பாடு என்று பொதுமக்கள் பாராட்டினர்.

### கடம்பூர் தீர்மானம்.

கடம்பூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 16—8—50 புதன் இரவு 8-30 மணிக்கு வே.மு. மாரியப்பன் தலைமையில் நடந்தது. பிற்படுத்தப்பட்ட இனத்தவர் முன்னேற ஊன்றுகோல்போல உதவிய வகுப்பு விகிதாசார முறை நீடிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

### ஆர்க்காடு தி. மு. மாணவர் கழகம்

15—8—50-ல் கூடிய ஆர்க்காடு திராவிட முன்னேற்ற மாணவர்க்கழக உறுப்பினர் கூட்டத்திற்கு மணி எழிலன் தலைமை வகித்தார். வகுப்பு நீதி தேவை யென்ற தீர்மானத்தை யொட்டிப் பலர் பேசினர். ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறிற்று.

### திருப்பூரில் அறப்போர்

16—8—50 அன்று திருப்பூர் நஞ்சப்பா உயர்நிலைப் பள்ளி—கே. சுப்பிரமணி செட்டியார் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் கம்யூனல் ஜி. ஓ. வை ஆதரிக்க ஊர்வலமாகச் சென்று இவ்வூர் கஜலக்ஷ்மி தியேட்டரில் ஓர் கூட்டம் நடத்தினர். கூட்டத்திற்கு தோழர் வி. பாலசுப்பிரமணியம் பி. ஏ. தலைமை வகித்தார். தோழர்கள் பெத்தாம்பாளையம் பழனிசாமி, க. சுப்பிரமணி, தி. நடராசன், மாணவன் முத்து, ரத்னசபாபதி ஆகியோர் கம்யூனல் ஜி. ஓ. வின் அவசியத்தைப் பற்றிப் பேசினர்கள். தலைவர் பின்னுரைக்குப் பின் தோழர் தி. மயில்சாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

### சோழவந்தானில்!

சோழவந்தான் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 14—8—50ல், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஆதரிக்கிறோம் என்று அறிவிக்க, பள்ளி செல்லாது, செல்பவரையும் அமைதியான முறையில் தடுத்து நிறுத்திப் பிறகு ஊர்வலமாகப் புறப்பட்டு, நகரின் முக்கிய தெருக்களின் வழியாகச் சென்றனர். 'வகுப்புவாரி முறை வாழ்க' 'இந்திய அரசியல் திட்டத்தை மாற்றுக, என்று முழங்கிய வண்ணம் நடந்தனர். ஊர்வலத்தில் நகரிலுள்ள ஆரம்ப, நடுத்தரப் பள்ளி மாணவ மாணவிகள் ஏறத்தாழ 1500 பேர்களுக்கு மேல் கலந்து கொண்டனர். ஊர்வலம் மாணவர் பாலகிருட்டினன் இறுதிச் சொற்பொழிவோடு முடிந்தது. மாணவர்களின் ஒற்றுமையுணர்ச்சியும், இன உயர்விற்கு உழைக்கவேண்டும் என்ற ஆர்வமும் ஊர் மக்களையே விழிப்படையச் செய்தன.

### திருவாரூரில்!

14—8—50 திங்கட்கிழமை, கம்யூனல் ஜி. ஓ. வுக்காகத் தாங்கள் ஆதரவு காட்டவேண்டி பள்ளி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல், ஒரு மாபெரும் ஊர்வலம் கிளம்பி ஆண்டாள் தெருவில் வந்து கொண்டிருந்த ஊர்மக்கள் ஊர்வலத்தோடு கலந்துகொண்டது. அன்று நடந்த ஊர்வல வெற்றிக்கு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட மாணவ முன்னேற்றக் கழகம், பார்திதாசன் படிப்பகம், வன்னியர் குலச் சங்கம் ஆகியவை ஒத்துழைத்தன.

நகராண்மைக் கழகத்திற்கெதிரில் அமைக்கப் பட்டிருந்த மேடையில், 11-30 மணிக்கு தோழியர் சுந்தரலீலாசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத் தோழர்கோபால்சாமியும்பேசினர். தோழர்முத்து கிருஷ்ணன் நன்றி கூறலுடன் கூட்டம் முடிந்தது.

✱

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வரவேண்டும். இல்லையெனில் எங்களது கைகளிலே தார் தொட்டியையும் பிரஷையும் தான் காணநேரிடும்! எங்கள் தோழர்கள் தங்களது கடமையைச் செய்யத் தவறமாட்டார்கள். தாய் மொழியைக் காக்கச்சட்டத்தையும் அடக்கு முறையையும் துச்சமென நினைப்பர். நினைவிருக்கட்டும்!" என்று எச்சரித்தார்.

சேலம் சிறையில் கைதிகளைச் சுட்டுத் தள்ளியது, நாட்டில் 'ரேஷன் கிடைக்காது மக்கள் திண்டாடுவது ஆகியவை குறித்து விளக்கமாகப் பேசிய பின் கடைசியாக அவர் கூறியதாவது, "நமது இலட்சியம்–நீதிக்கும் நேர்மைக்கும் பாடுபடுவது. நெஞ்சாலும் தீமை நினையாதிருப்பது. வஞ்சகமும் சூதும் நாம் விரும்பாத பாதைகள். வாழ்வைச் செப்பனிடுவதும் சமுதாயத்தைச் சீர்திருத்துவதும் நமது நீங்காத பணி. சுயநலம் நாம் தூக்கி எறிந்துவிட்ட கழிவுப் பொருள். ஆகவேதான், எந்த நடவடிக்கையில் நாம் இறங்கினாலும் வீழ்ச்சியைக் காண்பதில்லை—வெற்றி முரசு கொட்டுகிறோம்! நாம் இதுவரை எடுத்த எந்த முயற்சியும் வீணானதில்லை. வீணர்களல்ல நாம்; வெற்றியின் சித்திரங்கள்! விவேகத்தை வாள் எனக்கொண்டு நீதியைக் கேடயமாக வைத்துப் போரிடும் காளைகள்.

எனவேதான், துவக்கத்தில் நாம் கூறியவைகளைக் கேட்டு கெக்கலிப்போர்—கடைசியில் நாம் சொன்னதே சரி என்கின்றனர். நாம் கூறியதையே ஏற்றுக்கொள்கின்றனர், இந்தி விஷயத்தில் மட்டுமல்ல! ஜமீன் ஒழிப்பு — மடாதீன மசோதா—வகுப்புவாரி முறை இவைகள் யாவும் நாம் அப்போதே கூறியவைதானே! ஆகவேதான் நமது நம்பிக்கை விரிகிறது—நமது இலட்சிய தேமாகிய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற பண் இன்றில்லாவிட்டாலும், நாளை, நாளை இல்லாவிட்டாலும் இன்னும் நான்கு ஆண்டுகள் கழித்து என்றாவது ஒரு நாள் இந்நாடு எங்கும் எழும்பித் தான் தீரும்—இது நிச்சயம். இதை, ஆளவந்தாரின் அடக்குமுறைகளோ, கண்டனக் குரல்களோ, காட்டாட்சி முறைகளோ தடுத்துவிட முடியாது. அவைகளைத் தாண்டி வெற்றிபுரி நோக்கி விரையும் வீரர்கள்தாம்–வீணர்களல்ல!" என்று கூறினர். தோழர் சதாசிவம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

(ஒரு நிருபர்.)

5-ம் பக்கத் தொடர்ச்சி

லவர், போண்டிலி, போயா, சட்டடா, செஞ்சு, தேவாங்கர், ஏனாதி, கங்கவர், கோண்டு, ஈழவர், இருளர், இசைவேளாளர், ஜந்திரர், ஜங்கமர், கள்ளர், கைக்கோளர், கம்மாளர், குறும்பர், குருபர், குலாலர், மாப்பிள்ளைமார், மராட்டியர், மறவர், மருத்துவர், முதுவர், ஓடியர், ஓரியர், படையாச்சி, பார்க்கவகுலம், பட்டுநூல்காரர், பெருவண்ணான், பொறைபா, புல்லவன், ரெட்டி, சேடன், பர்வதராஜர், சேனைத் தலைவர், சோழகர், சௌராஷ்டிரர், துளுவ நாய்க்கர், துறையர், தொண்டமான், வடுவர், வலையர், வாணிபர், வண்ணார், வீரகோடி வெள்ளாளர், யாதவர் இப்படிப் பிற்படுத்தப்பட்டவர் எத்தனையோ பேர்—இவர்களும் மற்றவர்களுடன் போட்டியிட்டுக் கொண்டு முன்னேறவேண்டும். அதற்கான உதவி, வசதி செய்து தரப்படவேண்டும்.

சர்க்கார் ரிகார்டுகளிலும், போலீஸ், மருத்துவ, சிறைக் குறிப்புகளிலும் சாதியின் பெயரை நீக்கிவிடலாம் என்று கூறுகிறது கமிட்டி! கொக்கைப் பிடிக்க, அதன் தலையில் வெண்ணெய் வைத்து அது உருகிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த ஏமாளியைப் போலத்தான் நாமும் ஆகிவிடுவோம், இந்த முறையால சாதி வித்தியாசம் மறைந்துவிடும் என்று நம்பினால்! புண்ணை மறைக்க புனுகு பூசிக்கொள்வதா? பரவியிருக்கும் படையை மறைக்க திருநீறணிந்து தேவாரம் பாடினால் போதுமா? பரம்பரை பரம்பரையாக வளர்ந்து வரும் இந்தப் பாழான நம்பிக்கையைப் போக்க, ஆட்சியாளர் குறிப்புகளிலே பெயரை எழுதாமல் விட்டுவிட்டால் மட்டும் போதுமா?

திவேகார் கமிட்டி, தாழ்த்தப்பட்டோருக்குச் சலுகைகள் காட்டுவதை ஒத்துக்கொண்டுள்ளது—அதுபோலவே, பிற்படுத்தப்பட்டோருக்கு கல்லூரி சேர்ப்பில் கொடுக்கப்படும் உதவியையும் மறுக்கவில்லை. காலப்போக்கில் மாற்றிக்கொள்ளலாம் என்று கூறுகிறது.

பேதங்கள், பிரிவுகள், பிளவுகள் — எல்லாம் ஒழியவேண்டியதுதான்! யாரும் தடுத்துக்கூறும் துணிவுடன் இன்று இல்லை! நந்தனுருக்கு அருள் தந்த சிவனும், திருப்பாணாழ்வாரைத் தோளில் தூக்கிவா என்று கட்டளையிட்ட திருமாலும், தங்கள் பக்தகோடிகளுக்கும் அந்தப் புத்தி ஆகியிருந்தே இருக்கும்படி செய்திருந்தால் தொல்லையில்லாமல் போயிருக்கும்! அவர்கள் இரத்தநாளங்களிலெல்லாம் துடித்தோடுகிறது சாதிவெறி — பிரிவு நஞ்சு! அதனைப் போக்குவதற்கு சர்க்கார் பதிவுகளில் எழுதாமல் விட்டுவிடுவதுதான் ஏற்ற முறை என்று எண்ணினால் ஏமாற்றம் வரவேற்கும் நம்மை—இது குழந்தை விளையாட்டாகிவிடும்! இந்நாட்டுச் சாதிமுறை புரையோடிப்போன புண், வெட்டி ஆற்றவேண்டிய கட்டி! இதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

பூநூலை மாட்டிக்கொண்டு சாதி ஆசான்கள் உலவுகிறார்கள். நெற்றியை விளம்பரப் பலகையாக்கிக்கொண்டு திரிகிறார்கள் மக்கள். சாதி ஒழியுமா?

புத்தரையும், மகாவீரரையும் ஏய்த்துவிட்ட சாதிமுறை, திவேகாரைக் கண்டு திகைத்துவிடுமா? மருண்டுவிடுமா? கபீர், நானக், இராமானுசர் இவர்களையே எடுத்துவிழுங்கிவிட்ட இந்தச் சூதுச்சுரங்கத்தை யாரே தூர்க்கவல்லார்? திவேகார் திட்டம், சொல்ல இனிக்கும், படிக்க ருசிக்கும், நடைமுறையில் கசக்கும்! காரியத்தில்வெற்றி தராது.

சாதிக்கு இருக்கிற இரும்புப்பிடியைக்கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்திவருகிறோம் நாம்நமது பகுத்தறிவுப் பிரச்சாரத்தால்! கல்லடியும் சொல்லடியும் வாங்கிவிட்டோம். கருத்திருண்டோரின் வசவுகளையும் கேட்டுவிட்டோம். பழைமையின் தூற்றுதலைப் பெற்றுவிட்டோம்— இருந்தும் சாதி ஆணவம் மடியவில்லை — அளவில், தன்மையில் குறைந்தாலும்! திவேகார் கொக்கைப்பிடிக்க, வெண்ணெய் தருகிறார்-இது கேலிக்குரிய காட்சி, சிந்தனையாளர் உலகில்! புண்ணை மறைக்க, புனுகு தருகிறார், இது பரிதாபத்துக்குரிய செய்தி, உண்மை விரும்பிகளிடையே!

சாதிமுறையால் தங்கள் வாழ்வை நகர்த்தும் சிலவக்கிரகங்கள் நாட்டில் இருப்பதால்தான் சாதி போகவில்லை. அவர்கள் அந்த நம்பிக்கையை வளர்க்கிறார்கள்.

சாதிக்கு சாஸ்திரத்துணை-இதிகாச எடுபிடி, புராண பராக்குக்காரர், புரோகித தம்பட்டம் எல்லாம் உண்டு. இதனைக் காட்டித்தான் வகுப்புவாதிகள் சாதிமுறையை விரிவுபடுத்திவிட்டார்கள். நம்வேதனையை விசாலப்படுத்திவிட்டார்கள். பாமரரின் பண்படாத மனத்தில் தங்களுடைய சூதுக்கலப்பையால் உழுது, நம்பிக்கைநீர்பாய்ச்சி, சாதி விதையைத் தூவிவிட்டார்கள். அதன் கோரக்கூத்து பார்க்க சகிக்கவில்லை.

அதனை அடிப்படையாகக் கொண்டுதான் அவர்கள் சுகபோக மாளிகையை அமைத்துள்ளார்கள். அந்த அடிப்படை தகர்க்கப்படாத வரை சாதி மறையாது-மரிச்காவிட்டாலும். மங்கக் கூடச் செய்யாது, தனது சக்தியில், வலிமையில்!

சமபந்தி போஜனம் என்று நாடகமாடிக் காட்டிவிட்டார்கள், தேசியவீரர்கள். சாதி போகவில்லை, இருக்கிறது! வள்ளலார் பாடலை மனமுருகப்பாடிவிட்டார்கள். நாயன்மார் நவின்றது, ஆழ்வார் அருளியது என்று பேசிவிட்டார்கள். இன்னமும் சாதி சாகவில்லை, வாழ்கிறது! நந்தன்கதையைச் சொன்னார்கள், திருப்பாணாழ்வாரைப் பற்றிக்கூடப் பிரசங்கம் செய்தார்கள். சாதிமுறை சாவைத் தழுவவில்லை, சாகாவரம் பெற்றே நிற்கிறது!

சாதி, சர்க்கார் ரிகார்டுகளில் மட்டும் எழுத மறுத்துவிட்டால், ஒழிந்துவிடுமா? நாடி நரம்புகளில் புடைத்தோடும் நாசகால கருத்தாயிற்றே —அதனை எடுத்தெறியும் முறை, திவேகார் தரும் திட்டமல்ல — திவேகார் இன்னும் கொஞ்சம்நடந்து செல்லவேண்டும். சட்டம் சமுகத்தின் வெளிவாயில்-அங்கேபோய் நின்றால் புறம் தெரியும் — அகம் அறியமுடியாது. சமுகநீதி என்ற தோட்டத்துப்பக்கம்வரை சென்றால்தான் முழுஉண்மை புலப்படும். திவேகார், அப்படி உள்நுழைந்து சென்றால் திணறிப் போயிருப்பார்—திக்குமுக்காடியிருப்பார்—திடுக்கிட்டுமிருப்பார், சில சமயங்களில்!

ஆட்சியாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பேற்ற அவர், தாராளமாகச் சொல்லியிருக்கலாம், ஒரேசாதியில் திருமணம் செய்வது சட்டவிரோதம் என்று! அதுதான் ஏற்றமுறை. மருந்து காரமானாலும், நோயின் கடுமையை மனதில் எண்ணி, அருந்தித்தானே ஆகவேண்டும்.

திவேகார் கமிட்டி தாழ்த்தப்பட்டோருக்குச் சலுகைதருவது தவறுஎன்று சொல்லவில்லை உண்மையைப் புரிந்திருக்கிறது என்பதற்கு அத்தாட்சி அது! கல்லூரிகளில் சேர்ப்பது, சம்பள சலுகை தருவது இவைகளில் கூட அவசரம் தேவையில்லை, கொஞ்சம் கொஞ்சமாக சாதிமுறையை ஒழித்துவிடலாம் என்ற போக்கையுணர்ந்திருப்பது, நிலைமையை அறிந்துள்ளார்கள், உள்ளது உள்ளபடியே, என்று தெரிகிறது.

இடம் தெரிகிறது — பாதை தெரியவில்லை! திவேகார்சாதிமுறையைஒழிக்கமுனைந்தார். ஆனால் பாதிகிணறு தாண்டுவது போல, ஆட்சியாளர் குறிப்புகளோடு நின்றுவிட்டார்! சாதி கொக்கல்ல, பாய்ந்திடும் கொடிய புலி—பிடிக்க வெண்ணெய் முறை கையாள்வது விவேகிகள் விரும்பாதது! வேறுமுறை தேவை—அதுவும் புலியைப் பிடிக்க! திவேகார் இதனை மனதில் நிறுத்த வேண்டும்.

✻

3-ம் பக்கத் தொடர்ச்சி

சமுதாயத்தினரான பார்ப்பனரல்லாத மக்களெல்லாம் பதறிப் போயிருக்கிறார்கள். ஆத்திர அனலைக் கக்கி வருகிறார்கள். "சமநீதி வேண்டும்" என்று உரிமை முழக்கம் செய்தவண்ணம் உள்ளார்கள். இந்திய நாட்டின் ஏனைய பகுதியில் வாழ்வோரெல்லாம் சிரத்தை காட்டக்கூடிய அளவில் இப்பிரச்னை வளர்ந்திருக்கிறது—முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆனால், இது குறித்து இத்தமிழகத்தில் உலவும்,

சுதேசமித்திரன்
இந்து
தினமணி

முதலிய தினசரி இதழ்கள் செய்திகளைப் பிரசுரிப்பதேயில்லை. திராவிடரிபக்க இதழ்களும்,

மெயில்
தினசரி

போன்ற, பத்திரிகைகளுமே, மக்கள் மன்றத்தில் நடைபெறும் உண்மைகளை வெளியிட்டு வருகின்றன தேசிய இதழாகிய "தினசரி"கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தவர் பெயர்களைப் போட்டு, நீதிக்காகப் போராடுவதையே நோக்கமாகக் கொண்டு போராடுகிறது!

ஆனால், பத்திரிகா தர்மம் பேசும் பத்திரிகைகளோ, மக்களிடையே கொந்தளிப்பையேற்படுத்தியிருக்கும்இப்பிரச்சினையை மறைத்துவிடமுயன்று வருகின்றன. நமது இயக்கத்தவர் காட்டும் சிரத்தையையும், பொதுப் பிரசினையாக மக்கள் மன்றத்தில் இது வளர்ந்திருப்பதையும் திரை போட்டு மறைப்பதையே கடமையாகக் கொண்டுள்ளன.

இதற்குள்ள காரணம் இரகசியமானதல்ல—வகுப்புவாரி நீதி மக்கள் யாவருக்கும் எல்லாத் துறைகளிலும் சமசந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்பது.

ஆனால் இந்நாட்டில் வாழும் வகுப்புவாதிகளான ஆதிபத்ய வாசிகளோ, எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் ஏற்பட்டால் தங்கள் பெருமையும் வாழ்வும் பாதிக்கப்படுமென அஞ்சுகின்றனர்.

இந் நிலையில் நாட்டில் வசதியோடு நடமாடும் பத்திரிகைகளோ, ஆதிபத்ய வாசிகள் கையிலிருக்கின்றன. எனவேதான் "அவர்கள்" இந்நாட்டுப் பொது மக்களின் ஏகோபித்த கிளர்ச்சி—தமது வர்க்கத்தின் வாழ்வைப் பாதிக்கும் என்ற காரணத்தால், இச் செய்திகளுக்கு மதிப்புத் தராமல், இருட்டடிப்புச் செய்து வருகின்றன. இந்தக் கைங்கர்யத்தை சாமர்த்தியமாகச் செய்துவரும் ரகுநாதர் பேசுகிறார் பொது மக்கள் தாம் எஜமானர்கள் என்பதாக!

பேசுவது வாய் இனிக்க! ஆனால் செய்வதோ உயிர் போக!!

ஆபத்தான ஆசாமிகள் ஆயினும் அவர்கள்தான் உலவுகின்றனர், வசதியோடு—பிறர்பாராட்டுதலோடு, அரசாங்கமே கண்டு திகைக்கும் அவ்வளவு அட்டகாசத்தோடு!

பசுத்தோல் போர்த்திய புலிகள்—நடமாடுகின்றன, திராவிடச் சமுதாயத்தில். இவைகளின் பித்தலாட்ட வேடங்கள், என்றாவது கரையத்தான் செய்யும். மக்கள் என்றுமே மனித ஊமைகளாக இருந்து விடமாட்டார்கள். சுயநலத்தைத் தவிடு பொடியாக்கி, பிறர்நலம் பேசி பணப்பை நிரப்பும் சூதுப் பேச்சைத் தரைமட்டமாக்கி, நல்வாழ்வு அமைக்க எதிர்கால இளைஞர்கள்புறப்பட்டு விட்டார்கள்! கவனமிருக்கட்டும்!!

✻

## திருத்தம்

ஆசைத்தம்பி வழக்கு நிதி குறித்து கடந்த வாரம் நமது இதழில் வெளிவந்திருக்கும் பட்டியலில் குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் ரூ 20 என்றிருப்பதை குடந்தை திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக அனுப்பப்பட்டது என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

(ஆ—ர்)

## செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகக் குழுக் கூட்டம்

3-9-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணியளவில் காஞ்சிபுரம் 'திராவிட நாடு' நிலையத்தில் செங்கற்பட்டு மாவட்டத் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெறும். மாவட்ட மாநாடு பற்றி யோசிக்கப்படும். உறுப்பினர்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு வரும்படி கேட்டுகொள்கிறேன்.

சே. கோ. பெருமாள்,
விளம்பர உறுப்பினர்.


## நண்பர்களுக்கு!

உங்களின் பேராதரவு பெற்றுள்ள

"திராவிடன்"

(வார இதழ்)

18, பெருமாள் முதலி தெரு, ஜி. டி. சென்னை 1.

1950 செப்டம்பர் 9-ந் தேதி முதல் புதிய முறையில் வெளிவருகிறது.

விலை 0-1-6 (12 பக்கங்கள்)

ஆண்டு சந்தா ரூ. 5

அன்பர்களனைவரும் சந்தாதாரராகச் சேர்ந்து ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

விற்பனையாளர்கள் உடன் விவரங்களுக்கு எழுதவும்.

அன்பன்
என். வி. நடராசன்
ஆசிரியர்—உரிமையாளர்.


Edited Printed & Published by C N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram